விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 176 வள்ளுவர் ஆண்டு 2057 வைகாசி 30 சனிக்கிழமை (13.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பாடகர் சங்கீத்தன் பிணையில் விடுதலை

(சாவகச்சேரி)

தாயகப்பாடல் பதிவேற்றம் தொடர்பில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சொல்லிசைப் பாடகர் கனேஷ்குமார் சங்கீத்தனை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை பிணையில் விடுவித்துள்ளது.

(02 ஆம் பக்கம் பார்க்க)



## பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறும் - கல்வி அமைச்சு

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டின் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) மற்றும் கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) பரீட்சைகள் திட்டமிடப்பட்ட தவணை அட்ட 02ஆம் பக்கம் பார்க்க

## கடற்படை நியமனத்தில் மோசடி யோஷிதவுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையில் இணைந்து கொண்டது தொடக்கம் யோஷித ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுச் சுற்று 15ஆம் பக்கம் பார்க்க



### கடல் சீற்றத்தால்
## கவிழ்ந்தது படகு மீனவர் ஒருவர் மாயம்

(நெடுந்தீவு)


நெடுந்தீவு கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவர் 15ஆம் பக்கம் பார்க்க

## குருந்தூர் பௌத்தத்திற்குரியது தொல்லியல் திணைக்களம் ஓரவஞ்சகம்

(கொழும்பு)

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் இந்துக் கோவில் இருந்தமைக்கான சான்றாதாரங்கள் எதுவும் வெளிப்படவில்லை எனத் தொல்லியல் திணைக்களம் புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

(02 ஆம் பக்கம் பார்க்க)



## கடும் கொந்தளிப்பான நிலையில் கடற்பரப்பு
### சிவப்பு எச்சரிக்கை நீடிப்பு

(கொழும்பு)

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக கற்பிட்டி வரையான கடற்பரப்புகளுக்கு வளிமண்டலவியல் 16ஆம் பக்கம் பார்க்க

### சிறுமி மீது துர்நடத்தை
## பல்லேகம ஹேமரத்ன தேரரை டி.என்.ஏ பரிசோதனைக்குட்படுத்த உத்தரவு

(அநுராதபுரம்)

சிறுமி ஒருவரைப் பாலியல் துர்நடத்தைக்குட்படுத்தியதாகக் குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் அட்டமஸ்தானாதிபதி பல்லேகம ஹேமரத்ன தேரரிடம் டி.என்.ஏ பரிசோதனைக்காக இரத்த மாதிரியைப் பெறுமாறு அநுராதபுர பிரதம நீதிபதி சியபத் சசிந்து விக்ரமரத்ன நேற்று (12) உத்தரவிட்டுள்ளார்.

அதன் பிரகாரம் சந்தேக நபர் ஜூன் 16ஆம் திகதி அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் நேரில் 15ஆம் பக்கம் பார்க்க

### – செம்மணி மனிதப்புதைகுழி –
## என்புக்கூடுகளின் எண்ணிக்கை நேற்றுடன் 350ஐக் கடந்தது

(யாழ்ப்பாணம்)

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வில் இதுவரையான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட மனித என்புக்கூட்டுத்தொகுதிகளின் எண்ணிக்கை 350 ஐத் 15ஆம் பக்கம் பார்க்க



### – முன்னாள் அமைச்சர் –
## எஸ்.எம் சந்திரசேனவுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை

(கொழும்பு)

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள 15ஆம் பக்கம் பார்க்க

## பூஜிதவுக்கு எதிரான வழக்கு ஜூலை 31 ஆம் திகதி தீர்ப்பு

(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல் குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிற்கு எதிரான வழக்கில் ஜூலை மாதம் 31ம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படுமென கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

தாக்குதல் குறித்து முன்கூட்டிய புலனாய்வுத் தகவல் கிடைக்கப்பெற்ற 15ஆம் பக்கம் பார்க்க

### நீதிபதிகளின் வெற்றிடம்
## சபாநாயகரிடம் கடிதம் சமர்ப்பித்த எதிரணியினர்

(கொழும்பு)

உயர்நீதிமன்றத்தில் தற்போது நிலவும் நீதிபதி பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து கவனம் செலுத்தி, அந்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கக்கோரி, எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## குருந்தூர்...

கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளரினால் குருந்தூர் ஆதிசிவன் ஐயனார் கோவில் புனரமைப்புத் தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதத்துக்கே குறித்த பதில் வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரதி புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு தேசிய மரபுரிமைகள் பிரிவின் ஊடாக, பதில் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் ஆர்.ஏ.செனரத் விக்கிரமசிங்கவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

குருந்தூர்மலை விகாரை அமைந்துள்ள நிலமானது, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பௌத்த சான்றுகளைக் கொண்ட ஒரு இடமாகும். அங்கு இந்துக் கோவில் இருந்ததற்கான சான்றுகள் எதுவும் வெளிப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 1940ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் பிரகாரம் தொல்பொருள் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு நிலப்பரப்பிற்குள் ஏதேனும் ஒரு புதிய கட்டடத்தையோ அல்லது நிர்மாணத்தையோ மேற்கொள்வது சட்ட விரோதமானது என்பதுடன் அது 34 ஆம் பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, அத்தகையதொரு பௌத்த மதத் தலத்துக்குள் ஒரு இந்துக் கோவிலை நிர்மாணிப்பதன் மூலம் ஏதேனும் ஒரு தரப்பினரால் புனிதமாகவும் கௌரவத்துடனும் மதிக்கப்படும் ஒரு குழுவினரைத் தூண்டும் வகையில் செயற்படுவது மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 31 (ஆ) பிரிவின் கீழ் ஒரு குற்றமாகும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய மேற்குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் இவ்விடத்தில் ஓர் இந்துக் கோவிலை நிர்மாணிப்பதற்கோ அல்லது புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கோ அனுமதி வழங்க முடியாது என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதுஎவ்வாறாயினும் காலம்காலமாக தமிழ் மக்கள் வழிபாடு செய்து வந்த ஆதிசிவன் ஐயனார் ஆலயம் குருந்தூர்மலையில் உள்ளது. அங்கு ஆண்டுதோறும் பொங்கல் வைத்து வழிபாடு நடத்துவது, அப்பிரதேச மக்களுடைய மரபாக உள்ளது. கடந்த 2018இல் திடீரென பௌத்த பிக்கு ஒருவர் இராணுவத்தினரின் துணையுடன் புத்தர் சிலையை வைக்க முயன்ற போது அதற்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட இந்த விவகாரம் நீதிமன்றத்துக்குச் சென்று வழக்காக மாறியது. குறித்த இடத்தில் புராதன விகாரை ஒன்று இருந்தது என்று கூறிக்கொண்டு அந்த இடத்தில் புதிய விகாரை அமைக்க முயன்றிருந்தார் குறித்த பௌத்த பிக்கு.

நீதிமன்றம் இந்த விவகாரத்தை விசாரித்து வரும் அதே வேளை, தமிழ் மக்கள் தொடர்ந்து வழிபாடு நடத்த அனுமதி அளிக்கப்பட்டதுடன் யாரும் அங்கு புதிய கட்டுமானங்களைச் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## பாடகர்...

சொல்லிசைப் பாடகர் சங்கீத்தனுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை விலக்கிக் கொள்ள சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் மூன்று முறை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் இறுதியாகப் பாடகர் சங்கீத்தனுக்கு நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றுக் காலை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர். அதில், பாடகர் சங்கீத்தனுக்கு எதிரான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொள்ள சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தனர்.

எனினும் இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் 120 ஆம் பிரிவின் கீழ், "அரசின் மீது வெறுப்புணர்வைத் தூண்டுதல் அல்லது அதிருப்தியை ஏற்படுத்த முயற்சித்தல்" என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவருக்கு எதிராகத் தொடர்ந்தும் வழக்கு நடத்தப்படும் எனப் பொலிஸார் மன்றுக்கு அறிவித்தனர். இது தொடர்பான சட்டமா அதிபரின் உத்தியோகபூர்வ கடிதமும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது இடம்பெற்ற நீண்ட வாதப் பிரதிவாதங்களையடுத்து நீதிமன்றினால் சிறிது நேரத்துக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சிறிதுநேரத்தின் பின் வழக்கு மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் சட்டமா அதிபரின் உத்தியோகபூர்வ கடிதம் கிடைக்கவில்லை எனத் தெரிவித்த நீதிபதி பிணைக் கோரிக்கையை ஒத்திவைத்தார்.

எனினும் குறித்த கடிதமானது கிடைக்கப் பெற்றதனையடுத்து மூன்றாவது தடவையாக வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது, பாடகர் சங்கீத்தனை மூன்று முக்கிய பிணை நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் அனுமதி அளித்தது. (க-7)

## பரீட்சைகள்...

வணையின்படி உரிய தினங்களில் நடத்தப்படும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2025.09.11ஆம் திகதியிட்ட 30/2025ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் பாடசாலைப் பரீட்சை திகதிகள் உள்ளடக்கப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள 2025.07.09ஆம் திகதியிட்ட 6/1/2025ஆம் இலக்க சுற்றறிக்கையின் அடிப்படையில் கல்வி அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அந்தப் பரீட்சைகளுக்குரிய பாடத்திட்டங்களை முழுமையாகக் கற்பித்து முடித்து, மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏதேனும் ஒரு பாடசாலையில் பாடத்திட்டங்களை நிறைவு செய்வதில் தாமதம் காணப்படின், அதற்கென முன்கூட்டிய திட்டமிடலுடன் செயற்பட்டு, மேலதிக நேரத்தை ஒதுக்கியேனும் பாடத்திட்டங்களை நிறைவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், இது குறித்து தீவிர கவனம் செலுத்துமாறும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (க-7)


வேலையாட்கள் தேவை

- உதவி ஆசிரியர் (ஆண்கள் - இரவுக் கடமை)
- அலுவலகச் செய்தியாளர் (ஆண்கள் - இரவுக் கடமை)
- இயந்திர இயக்குநர் - பயிலுநர் (ஆண்கள் இரவுக் கடமை)
- க.பொ.த உயர்தரத்தில் சித்தி.
- யாழ்.நகரிற்கு அண்மையில் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
076 097 3121
(இ)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

சோதிடர் தேவை
சமூக சேவை நோக்குடன் யாழ்ப்பாணத்தில் இயங்கும்
கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவைக்கு திருமணப் பொருத்தம் பார்ப்பதில் சிறப்புத் தேர்ச்சியுடைய சோதிடர் தேவை.
(ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
தொடர்புகளுக்கு :
076 097 3121

காவலாளி தேவை
உடுவில் பகுதியில் இயங்கிவரும் தனியார் நிறுவனத்திற்கு முன்அனுபவமுள்ள பகல் நேர காவலாளி தேவை. (சம்பளம் 50,000/=)
தொடர்பு : 075 763 6911
(7836)


புதுக்குடியிருப்பு கோம்பாவில்
அருள்மிகு நாகதம்பிரான் ஆலய
வருடாந்த பொங்கல் விழா
விஞ்ஞாபனம் - 2026

புதுக்குடியிருப்பு கோம்பாவில் அருள்மிகு நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 15.06.2026 திங்கட்கிழமை வழமைபோன்று வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. நாகதம்பிரான் அடியவர்கள் அனைவரும் வருகை தந்து நாகதம்பிரானின் பேரருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

விசேட அறிவித்தல்
- வியாபாரம் செய்யவிரும்பும் வியாபாரிகள் மற்றும் நேர்த்திக்கடன் செய்ய விரும்புவோர் ஆலய பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

அனைவரும் வருக நாகதம்பிரானின் அருளைப் பெறுக

தொ.பே.இல : 077 346 7242, 077 744 5951, 076 141 8196
ஆலய பரிபாலன சபை
(5825)

கிழவன்காடு கலாமன்றம்
(யாழ்கிளை - காரைநகர்)
போட்டிகள் - 2026
மாணிக்கவாசகர் குருபூசை தினத்தினை முன்னிட்டு எமது கலாமன்றத்தில் கற்கின்ற மாணவர்களிடையே நடத்தப்படுகின்ற பேச்சுப் போட்டி, மனனப் போட்டி ஆகியன நாளை (14.06.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்கிளை கலாமன்றத்தில் நடைபெறும்.
தலைவர்
கிழவன்காடு கலாமன்றம் (யாழ்கிளை காரைநகர்)
(C-5827)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரத்தை சேமிக்கும் நோக்கில் மின்வெட்டு அமுல்படுத்தப்படவில்லை

## உறுதிபடத் தெரிவித்தார் வலுசக்தி அமைச்சர்



**(கொழும்பு) ..............**

**எல் நினோ வானிலை தாக்கத்திற்கு மத்தியிலும், நாட்டில் எந்தவித தடையுமின்றி தொடர்ச்சியான மின்சார விநியோகத்தை வழங்க எதிர்பார்த்துள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.**

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள வலுசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக்க,தற்போதைய மதிப்பீடுகளின்படி எல் நினோ நிலைமையினால் நீர்மின் உற்பத்தியில் மட்டுமே ஓரளவுக்கு பாதிப்பு ஏற்படக் கூடும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரின் கூற்றுப்படி, இந்த காலநிலை மாற்றத்தால் நீர்மின் உற்பத்தியில் சுமார் 127 மணித்தியாலங்கள் குறைவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இந்த பற்றாக் குறையை மாற்று வலுசக்தி மூலங்கள் ஊடாக ஈடு செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மின்சாரத்தை சேமிக்கும் நோக்கில் மின்வெட்டை அமுல்படுத்தும் எண்ணம் எதுவும் இல்லை என்றும் அமைச்சர் திட்டவட்டமாக உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, எல் நினோ நிலைமையினால் வலுசக்தி துறைக்கு ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கங்கள் குறித்து ஆராய்வதற்கும், எழும் சவால்களுக்குத் தேவையான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அடுத்த வாரம் ஜனாதிபதியுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

---

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில்

# 32 அரச அதிகாரிகள் உட்பட 70 பேர் 4 மாதங்களில் கைது



(கொழும்பு)

இவ்வருடத்தின் முதல் 4 மாதங்களில் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் 32 அரச அதிகாரிகள் உட்பட 70 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இவர்களில் 51 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.இதன்மூலம் அரசாங்கத்திற்கு சுமார் 19 இலட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில், இலஞ்சம் பெற்றமை தொடர்பில் 3,349 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட 314 வழக்குகள், நீதிமன்றங்களில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (நி)

---

# சித்திரவதைத் தடுப்புக்கான ஐ.நா.துணைக்குழு இலங்கை வருகை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைத் தடுப்புக்கான துணைக்குழு, 2026 ஜூன் 15 முதல் 24 வரை இலங்கைக்குத் தனது பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக வெளி விவகார அமைச்சு அறிவித்துள்ளது.


தனது வரவிருக்கும் பயணத்தின் போது, நான்கு பேர் கொண்ட ஐ.நா சபையின் சித்திரவதைத் தடுப்பிற்கான துணைக் குழுவினர் அமைச்சர் மட்டத்திலான சந்திப்புகளை நடத்துவதோடு, தொடர்புடைய அரசாங்க அமைச்சகங்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் மூத்த அதிகாரிகளுடனும் கலந்துரையாடுவார்கள்.

மேலும், இத்துதுக்குழுவினர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிரதிநிதிகளையும், குடிமைச் சமூக உறுப்பினர்களையும் சந்திப்பார்கள். (நி)

---

# குழந்தைத் தொழிலாளர்கள் இலங்கையில் அதிகரிப்பு

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தகவல்



(கொழும்பு)

2025ஆம் ஆண்டில் குழந்தைத் தொழிலாளர் தொடர்பாக சுமார் 516 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜூன் 12ஆம் திகதி கடைப்பிடிக்கப்படும் "குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு சர்வதேச தினத்தை" முன்னிட்டு வெளியிடப்பட்ட ஒரு சிறப்பு அறிக்கையில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தகவல்களின் பிரகாரம், கடந்த ஆண்டில் தொழிலாளர் தொடர்பான 173 முறைப்பாடுகளையும், குழந்தைக் கடத்தல் தொடர்பான 53 முறைப்பாடுகளையும், குழந்தைகளை பயன்படுத்தி யாசகம் எடுப்பது தொடர்பான 287 முறைப்பாடுகளையும் பெற்றுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (நி)

---

# நடப்பாண்டில் இதுவரை 122 பேர் நீரில் மூழ்கி உயிரிழப்பு



(கொழும்பு)

இந்த ஆண்டில் இதுவரை 122 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஃப்.யு. வூட்லர், இவ்வாறு உயிரிழந்தவர்களில் 113 ஆண்களும் 9 பெண்களும் அடங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த 2024 ஆம் ஆண்டில் 510 ஆண்கள் மற்றும் 85 பெண்கள் உட்பட 595 உயிரிழப்புகளும், 2025ஆம் ஆண்டில் 309 ஆண்கள் மற்றும் 67 பெண்கள் உட்பட 376 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் கூற்றுப்படி, 2024 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் நீரில் மூழ்கியதால் மொத்தம் 1,093 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் பெரும் பாலோர் இளைஞர்கள் என தெரிய வந்துள்ளது.

எனவே, விடுமுறை நாட்களிலும், பண்டிகைக் காலத்திலும் நீர்நிலைகளுக்கு அருகில் செல்லும் பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள் குறித்து பெற்றோர்கள் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வலியுறுத்தியுள்ளார். (நி)

---

# மின்னல் தாக்கத்துக்கு உள்ளான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் சிட்னி நோக்கிச் சென்ற ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்று நேற்று அதிகாலை புறப்பட்ட சிறிது நேரத்திலேயே மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளது.

இதனால், விமானம் மீண்டும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கே திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக விமான நிலையப் பணி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான UL-606 என்ற விமானமே சிட்னிக்குச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேற்று அதிகாலை சுமார் 1 மணியளவில் புறப்பட்டது.

ஏர்பஸ் A330 ரக விமானத்தில் 217 பயணிகளும் 16 பணியாளர்களும் இருந்தனர்.

அப்பகுதியில் நிலவிய மோசமான வானிலை மற்றும் மின்னல் காரணமாக விமானப் பயணத்தின் போது விமானம் மின்னலால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, விமானி பயணத்தை இரத்து செய்ய முடிவு செய்து, அதிகாலை சுமார் 1:40 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமானத்தைப் பாதுகாப்பாகத் தரையிறக்கினார்.

பயணிகளை சிட்னிக்கு ஏற்றிச் செல்வதற்காக, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் பின்னர் அதேவகையைச் சேர்ந்த மற்றொரு ஏர்பஸ் A330 விமானத்திற்கு ஏற்பாடு செய்ததாக விமான நிலையப் பணி அதிகாரி தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உலக கிண்ண கால்பந்து

# முதல் போட்டியை வெற்றியுடன் தொடங்கிய மெக்சிக்கோ



உலக கிண்ண கால் பந்தாட்ட சுற்றின் முதல் போட்டியில் மெக்சிக்கோ அணி, தென்னாபிரிக்க அணியை 2:0 என்ற கணக்கில் தோற்கடித்துள்ளது.

மெக்சிக்கோவில் நடைபெற்ற A குழுவின் முதல் போட்டியில் ஆரம்பத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய மெக்சிக்கோ அணி, இந்த வெற்றியை தனதாக்கியது.

இதனையடுத்து A குழுவில் மெக்சிக்கோ அணிக்கு 3 புள்ளிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை இந்தப்போட்டியில் மூன்று வீரர்களுக்கு சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டமை குறிப்பிடக்கூடிய அம்சமாக இருந்தது.

நடுவர் வில்டன் சம்பாயோ வழங்கிய மூன்று சிவப்பு அட்டைகள் இந்தப் போட்டியில் பெரும் பரபரப்பையும் விவாதத்தையும் ஏற்படுத்தின.

போட்டி ஆரம்பமாகி 9ஆவது நிமிடத்திலேயே மெக்சிக்கோ அணி தனது முதல் கோலைப் பதிவு செய்தது.

போட்டி முழுவதும் மெக்சிகோ அணியின் ஆதிக்கமே மேலோங்கி இருந்ததுடன், தென் ஆபிரிக்க அணியால் பெரிய அளவில் பதிலடித் தாக்குதல்களைத் தொடுக்க முடியாமல் போனது.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கிய 4ஆவது நிமிடத்தில் (49ஆவது நிமிடம்), மெக்சிகோ வீரர் பிரையன் குட்டிரெஸை பின்னால் இருந்து வீழ்த்தியதற்காக தென் ஆபிரிக்க அணியின் சிதோலேவிற்கு நடுவர் முதல் சிவப்பு அட்டையைக் காண்பித்தார்.

கோல் அடிப்பதற்கான தெளிவான வாய்ப்பைத் தடுத்த குற்றத்திற்காக அவர் மைதானத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இதனைப் பயன்படுத்தித் தனது இரண்டாவது கோலை பெற்ற மெக்சிகோ அணிக்கு.ரவுல் ஜிமினெஸ் 2ஆவது கோலைப் பெற்றுக்கொடுத்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

போட்டியின் கடைசிப் பகுதியில் மாற்று வீரராகக் களமிறங்கிய தென் ஆபிரிக்காவின் ஸ்வானே தனது கையை முரட்டுத்தனமாகப் பயன்படுத்தியதற்காகச் சிவப்பு அட்டை பெற்று வெளியேறினார்.

அடுத்த சில நிமிடங்களில், பெனால்டி எல்லைக்கு அருகில் முரட்டுத்தனமாகச் செயற்பட்ட மெக்சிக்கோ அணியின் தலைவர் சீசர் மாண்டெஸிற்கும் நடுவர் சிவப்பு அட்டை காண்பித்தார்.

இதுவும் கோல் அடிப்பதற்கான தெளிவான வாய்ப்பைத் தடுத்த காரணத்திற்காகவே வழங்கப்பட்டது.

இறுதியில், 10 வீரர்களுடன் விளையாடிய மெக்சிக்கோ அணி 2-0 என்ற கோல் கணக்கில் தென் ஆபிரிக்காவை வீழ்த்தியது. (3)

## தலைவர் கிண்ண உதைபந்தாட்டம்

# கொலின்ஸ், நவசக்தி அணிகள் வெற்றி






பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெற்று வரும் 40 வயதுக்கு மேற்போட்டோர் அணிகளுக்கிடையிலான தலைவர் கிண்ண உதைபந்தாட்ட போட்டித் தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் கொலின்ஸ் மற்றும் நவசக்தி அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

வடமராட்சி சிரேஸ்ட உதைபந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் அமரர் க.சொக்கன் அவர்களின் ஞாபகார்த்தமாக அபிராமி இரும்பகத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் தலைவர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி - 2026 புதன்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

குறித்த போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் இரண்டாம் நாளான நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு கொலின்ஸ் எதிர் உடுப்பிட்டி யூத் அணிகள் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கொலின்ஸ் அணி 2 : 0 என்ற கணக்கில் உடுப்பிட்டி யூத் அணியை வெற்றி கொண்டது.

தொடர்ந்து இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நவசக்தி மற்றும் வல்வை அணிகள் மோதின. வல்வை அணி முதலாவது கோல் அடித்த நிலையில் முதல் பாதி ஆட்டத்தின் இறுதி நொடிகளில் நவசக்தி அணி அதிரடியாக பதில் கோல் அடித்தது. 1 : 1 என்ற கணக்கில் இரண்டாவது பாதி ஆட்டம் விறுவிறுப்பாக நடைபெற்ற நிலையில் நவசக்தி அணி மேலும் இரு கோல்களை அடித்து வலுவான முன்னிலை பெற்றது. சளைக்காது ஆடிய வல்வை அணி பதில் கோல் ஒன்றை அடிக்க நவசக்தி சார்பில் மேலும் ஒரு கோல் அடிக்கப்பட்டது. ஆட்ட நேர முடிவில் 4 : 2 என்ற கோல் கணக்கில் நவசக்தி அணி வெற்றி பெற்றது.

கொலின்ஸ் மற்றும் நவசக்தி அணிகளின் வீரர்கள் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டு பதக்கம் அணிவித்து மதிப்பளிக்கப்பட்டனர். (3-60)

## ஆஸி.க்கு எதிரான ஒருநாள் தொடரை

# முதல்முறையாக கைப்பற்றிய பங்களாதேஷ்

அவுஸ்திரேலிய அணி பங்களாதேஷில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள், ரி-20 தொடர்களில் விளையாடுகிறது.முதல் ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் வென்று தொடரில் 1-0 என முன்னிலை வகித்தது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி டாக்காவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா விரைவில் முன்னணி விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது. ஒரு ஓட்டம் எடுப்பதற்குள் 3 விக்கெட்டுகளை இழந்தது.

மார்னஸ் லபுசேன், சேவியர் பார்லட் பொறுப்புடன் ஆடி அரை சதம் கடந்தனர். பார்லட் 52 ஓட்டங்களும், ஜோஷ் இங்கிலீஸ் 34 ஓட்டங்களும் எடுத்தனர்.

இறுதியில், அவுஸ்திரேலியா அணி 8 விக்கெட்டுக்கு 187 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழையால் ஆட்டம் தடைபட்டது.

மழை தொடர்ந்து பெய்ததால், டக்வொர்த் லீவிஸ் முறைப்படி பங்களாதேஷ் வெற்றி பெற 41 ஓவரில் 192 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இறுதியில், வங்கதேச அணி 35 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 195 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றதுடன், ஒருநாள் தொடரை 2-0 என கைப்பற்றி அசத்தியது. தவ்ஹித் ஹிருடோய் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார். ஆட்ட நாயகன் விருது முஸ்தபிசுர் ரகுமானுக்கு அளிக்கப்பட்டது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை முதல் முறையாக பங்களாதேஷ் கைப்பற்றி அசத்தியுள்ளது. (3)

## முதலாவது ரி–20 போட்டி

# இலங்கையை இலகுவாக வீழ்த்தி மேற்கிந்திய தீவுகள் அபார வெற்றி



கிங்ஸ்டன், ஜமைக்காவில் நடைபெற்ற இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான முதலாவது சர்வதேச ரி-20 போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 7 விக்கெட்டுகளால் அபார வெற்றியைப் பதிவு செய்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி சார்பில் அதிகப்படியான ஓட்டங்களாக கமிந்து மென்டிஸ் 39 பந்துகளுக்கு 51 ஓட்டங்களையும், குசல் மென்டிஸ் 23 பந்துகளுக்கு 36 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுகளையும், இஷான் மலிங்க 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

[illegible] 150 ஓட்டங்கள் [illegible] வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 19.2 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 149 ஓட்டங்களை பெற்று வெற்றிபெற்றது.

மேற்கிந்திய தீவுகள் அணி சார்பில் அதிகப்படியான ஓட்டங்களாக ஷாய் ஹோப் 54 பந்துகளுக்கு 65 ஓட்டங்களையும், பிரண்டன் கிங் 22 பந்துகளுக்கு 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.


இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி 1-0 என முன்னிலை வகிக்கின்றது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக ஒலி எழுப்பும் வாகனங்களை கையகப்படுத்த பொலிஸார் நடவடிக்கை

(கொழும்பு)

**பொது வீதிகளில் அதிக சத்தத்தை எழுப்பும் வகையில் மாற்றியமைக்கப்பட்ட சைலன்சர்களைப் பொருத்தி வாகனங்களை ஓட்டும் சாரதிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.**



இவ்வாறு அதிக சத்தத்தை எழுப்பும் வாகனங்களை பொலிஸார் கையகப்படுத்துவார்கள் என பொலிஸ் போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் தலைவர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட வாகனங்கள் குறித்து மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடம் இருந்து அறிக்கை பெறப்பட்டு, அதன் பின்னர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் என பிரதிப் பொலிஸ் மா அதிபர் சேனாதீர மேலும் தெரிவித்துள்ளார்.

மக்கள் தங்களது தனிப்பட்ட பயன்பாட்டிற்குப் பதிலாக, சாகசங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்காக மோட்டார் சைக்கிள்களை வாங்குவதை அதிகம் காண முடிகிறது.

குறிப்பாக பண்டிகைக் காலங்களில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட சைலன்சர்கள் பொருத்தப்பட்டு, பொதுமக்களுக்கு பெரும் இடையூறு விளைவிக்கப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மீண்டும் இனவாதத்தை தூண்ட விமல் வீரவன்ச, கம்மன்பில முயற்சி

## ரிசாட் எம்.பி சபையில் தெரிவிப்பு

(கொழும்பு)

சுரேஷ் சலே விவகாரத்தை வைத்து விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றோர் மீண்டும் இனவாதத்தைத் தூண்டிவிட்டு நாட்டில் குழப்பநிலையை உருவாக்க முயற்சித்து வருவதாக ரிசாட் பதியுதீன் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வலுசக்தி மற்றும் வாழ்க்கைச் செலவுப் பாதுகாப்புத் திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை அரசாங்கம் விரைவுபடுத்த வேண்டும் என்றும் இனவாதிகளின் சில்லறைத்தனமான அச்சுறுத்தல்களுக்கு அரசாங்கம் அடிபணியக் கூடாது என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார். (நி)

# மன்னாரில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விதைக்கடலைகள் வழங்கி வைப்பு




(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட 40 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் அவர்களுக்கு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை விதைக்கடலைகள் (கச்சான்) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் வடகிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் நிதி அனுசரணையில் தெரிவு செய்யப்பட்ட 40 விவசாயிகளுக்கு தலா 25 கிலோ நிறையுடைய விதைக்கடலை இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் பணியாளர்கள் இணைந்து மன்னாரில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-285)

# இராணுவமே வெளியேறு!

## எட்டாவது வெள்ளியாகத் தொடரும் வலி.வடக்கு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி, காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் "கொமோண்டோ" பங்களா முன்பாக நேற்றைய தினம் எட்டாவது வெள்ளிக்கிழமை போராட்டத்தினை முன்னெடுத்தனர்.




யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.


இந்நிலையில் தமது 651 ஏக்கர் வரையிலான காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், நேற்றைய தினம் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

அதேவேளை எதிர்வரும் 15ஆம் திகதி இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து 37 வருடங்கள் பூர்த்தியடையும் நிலையில் அன்றைய தினம் மாவட்ட செயலகம் முன்பாக பாரிய போராட்டத்தினை முன்னெடுக்க காணி உரிமையாளர்கள் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-33)

# மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டுதல் விழா

(யாழ்ப்பாணம்)


யா/வயாவிளான் மத்திய கல்லூரி மாணவர் தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டுதல் விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 7.45 மணிக்கு கல்லூரி அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. (3)



நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக தினமான புதன்கிழமை நல்லூர் கந்தப்பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சகஸ்ர சங்காபிஷேகம் இடம்பெற்றது. அன்றைய தினம் மாலை சண்முகப் பெருமானின் திருக்கல்யாண வைபோகமும் இடம்பெற்றது. தொடர்ந்து சுவாமி வெளிவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். (படம்: சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இழுவை மடித் தொழிலை முற்றாக தடை செய்யுங்கள்



## தமிழக முதல்வரிடம் இலங்கை மீனவர்கள் கோரிக்கை

(கொழும்பு)

**இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினைக்கு தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய் பேச்சுவார்த்தைக்கு வழிவகுத்து ஆக்கபூர்வமான தீர்வைப் பெற்றுத்தர வேண்டுமென அகில இலங்கை மீனவர் மற்றும் தொழிலாளர் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவில் கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்க காலத்தினை முன்னிட்டு 60 நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இழுவைமடி மீன்பிடித் தொழிலானது, எதிர்வரும் 15 ஆம் திகதி மீள ஆரம்பமாகவிருக்கின்றது. இந்தியாவில் இழுவைமடித் தடை நீங்குவது அந்த நாட்டு மீனவர்களுக்கு வசந்த காலமாக இருக்கலாம். ஆனால், அது எமக்குக் கடுமையான அழிவுக் காலமாகும்.

இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினையானது ஏறத்தாழ 23 வருடங்களுக்கும் மேலாக நீடித்து வருகின்றது. எமது அரசிடமும் இந்தியத் தரப்பிடமும் பலமுறை கோரிக்கைகளை முன்வைத்தும், இழுவைமடித் தொழிலை முழு மையாக நிறுத்துவதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான முயற்சிகளையும் இரு நாட்டு அரசுகளும் எடுக்கவில்லை.

இது தொடர்பில் பல பேச்சுகள் நடத்தப்பட்டு எட்டப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கும் இரு தரப்பும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் இந்திய - இலங்கை மீனவர்களுக்கிடையிலான நேரடிப் பேச்சு ஒன்று இடம்பெற்று, இழுவைமடிப் படகுகளின் அத்துமீறல்கள் தொடர்பில் ஒரு இறுதியான இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அன்பான கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

அத்துடன்-எமது அரசு இந்த இழுவைமடிப் படகுக்கள் விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு, இலங்கை கடற்பரப்பில் இழுவைமடித் தொழிலை முற்றாக இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். "வாரத்தில் குறைந்தது இரண்டு இழுவை மடிப் படகுகளையாவது கைது செய்யுங்கள்" என வலியுறுத்தி, அஞ்சல் அட்டைப் பிரசாரம் ஒன்றின் ஊடாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கடற்றொழில் அமைச்சுக்கு அனுப்பி வைக்கவுள்ளோம்.

எமக்கு வெகுவிரைவில் முறையானதொரு தீர்வு கிடைக்காவிடின், முல்லைத்தீவிலிருந்து நெடுந்தீவு வரை ஒட்டுமொத்த மீனவர்களையும் ஒன்றிணைத்துப் பாரிய கடல்வழிப் போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்." என அவர் தெரிவித்தார். (3)

# அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் சிலப்பதிகார விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் புலமை ஒளி-2026 சிலப்பதிகார விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கரவெட்டி துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தின் பௌராணிகர் வீரகத்திப் பிள்ளை விநாயகம் அரங்கில் இடம்பெறவுள்ளது.

ஹாட்லிக் கல்லூரி அதிபர் வே.உதயமோகன், தொடக்கவுரையினை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்தியகலாநிதி பஞ்சகல்யாணி ஸ்ரீபன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து சிலம்பிசை க.வாணிமுகுந்தன் தலைமையிலான "இளங்கோவின் அடி தொட்டு..." எனும் கவியரங்கும், தமிழருவி த.சிவகுமாரனின் "சித்திரச் சிலப்பதிகாரம்" எனும் எழிலுரை அரங்கும், வாமதேவ சிவசதீபனின் "பாண்டியன் பாலை" எனும் கதாப்பிரசங்கமும் மற்றும் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் தலைமையில் "கற்போரைப் பெரிதும் கலங்க வைக்கும் மரணத்தை அணைத்துக் கொண்டவர்" எனும் கருப்பொருளில் பட்டிமண்டபமும் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கலைப்பணிக்கான உயர் விருது கலாபூசணம் மா.அனந்தராஜன், சொல்வன்மைக்கான உயர் விருது தமிழருவி த.சிவகுமாரன் ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளது. (3)

# வடமராட்சிக்கு தீயணைப்பு பிரிவு உருவாக்க நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி பகுதிக்கு தீயணைப்பு பிரிவொன்றினை ஆரம்பிப்பது தொடர்பில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பிரதேச மக்களுக்கு ஒருங்கிணைந்த சேவைகளை வழங்குதல் தொடர்பாக, வடமராட்சி பகுதியில் உள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களையும், ஒன்றிணைத்து முதற்கட்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் வடமராட்சிப் பிரதேசத்திற்கு பொதுவான தீயணைப்பு அலகு ஒன்றினை ஆரம்பிக்க வேண்டும். அதனை வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையானது, இப்பிரதேசத்திற்கான தீயணைப்புப் பிரிவை நிறுவுவதற்கான வசதிகளையும், பிரதேசத்தின் அனைத்து பகுதிகளையும் குறுகிய காலத்தில் அணுகுவதற்கேற்ற வகையில், வடமராட்சியின் மத்திய பகுதியில் அமைக்கவுள்ளது.

எனவே, குறித்த சபையில் தீயணைப்புப் பிரிவை உருவாக்குவதும், அதற்கான ஒத்துழைப்பை வடமராட்சியில் உள்ள ஏனைய சபைகள் வழங்குவது பொருத்தமானதென தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், வடமராட்சிப் பிரதேசத்திற்கான ஒன்றிணைந்த திண்ம மற்றும் திரவ கழிவு முகாமைத்துவத்தினை ஏற்படுத்த வேண்டும்.

இந்நிலையில், எல்லா உள்ளூராட்சிச் சபைகளும் ஒரே விதமான கழிவகற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதைத் தவிர்த்து, ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபையும் ஒவ்வொரு செயற்பாட்டை வினைத்திறனாக கழிவுகளை முகாமைத்துவம் செய்ய முடியும்

அத்துடன் சுற்றுச்சூழலுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் செயற்பாடாக அமையும் எனவும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (3-33-60)





யாழ்ப்பாணம்-இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய கொடியிறக்க உற்சவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. (படம்:சிவசாந்தன்)



இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யோகாசனப் பயிற்சி நிகழ்வுகள் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய இராஜ கோபுர முன்றலில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அகில இலங்கை இளங்கோ கழகம்

## புலமை ஒலி - 2026

## சிலப்பதிகார விழா

இடம்
அல்லையம்பதி வடிவேலர் மணி மண்டபம்
துன்னாலை, கரவெட்டி.

காலம் - 12, 13 மற்றும் 14 ஜூன் 2026
(வெள்ளி, சனி, ஞாயிறு) மாலை 4.00 மணி

### இன்றைய நிகழ்வுகள்

**13.06.2026 சனிக்கிழமை**
**மாலை 4.00 மணி**
**பௌராணிகர் வீரகத்திப்பிள்ளை விநாயகம் அரங்கு**

முன்னிலை:திரு.கணபதிப்பிள்ளை பஞ்சலிங்கம்
(தொழிலதிபர்,BOTSWANA)

**வரவேற்பு நடனம்**
ந.அக்ஷயா, மு.மாதுலா, கி.நிலாவிழி, பூ.ஓம்ரிதா, ந.சானுஜா, கி.இலக்கியா (நெறியாள்கை:செல்வி.கீர்த்தனா சந்திரபாலன்)

**மங்கல விளக்கேற்றல்**
திரு.திருமதி நித்தியானந்தன் இரத்தினரஞ்சினி தம்பதியினர்
(கலைஞர் கந்தையா வடிவேலு அவர்களின் பேரனாரும் வடிவேலர் மணிமண்டபத்தின் முகாமையாளரும்)
திரு.திருமதி. செந்தூரன் சியாமளா தம்பதியினர்
(பிரதி அதிபர், வரணி மத்திய கல்லூரி)

**கடவுள் வாழ்த்து**
செல்வி.யோகாஞ்சனா யோகராசா
(ஆசிரியை, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

**கழகக்கீதம்**

**வரவேற்புரை**
திரு.க.கஜந்தன்

**தலைமையுரை**
திரு.வே.உதயமோகன் (அதிபர், ஹாட்லிக் கல்லூரி)

**தொடக்கவுரை**
எழுத்தாளர், வைத்தியகலாநிதி, பஞ்சகல்யாணி ஸ்ரீபன்
(ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)

**அறிமுகவுரை**
திருமதி.கிருஷ்ணலதா குலசாங்கர்
(அதிபர், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

**நன்றியுரை**
லோ.ஜே.காருண்யா மொறாய்ஸ்

**நிகழ்ச்சி தொகுப்பு**
திரு.த.குருபரன்

### கவியரங்கு

**"இளங்கோவின் அடி தொட்டு..."**
**தலைமை:சிலம்பிசை க.வாணிமுகுந்தன்**

பீடு அன்று : சி.ரஜினிகாந்
தீது அறுக : கி.லோகேஸ்வரன்
வல்வினை ஊட்டும் : சி.வினோஜிதன்
வளையாத செங்கோல்: ச.சுகர்ணன்

### எழிலுரை அரங்கு

**உரையாளர்**
**தமிழருவி.த.சிவகுமாரன்**
*பொருள்: "சித்திரச் சிலப்பதிகாரம்"*



**கதாப்பிரசங்கம்**
*"பாண்டியன் பாவை"*
*ஆற்றுபவர்:வாமதேவ சிவசதீபன்*

**இலக்கிய ஆணைக்குழு**

ஆணையாளர்:கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்
கற்போரைப் பெரிதும் கலங்க வைக்கும் மரணத்தை அணைத்துக் கொண்டவர்

**தசரதனே** : பேராசான் ஐ.கதிர்காமசேகரன்,த.கருணாகரன்
**கோவலனே** : சொல்லின்செல்வர் இரா.செல்வவடிவேல்,பரா.நமேஸ்
**கர்ணனே** : பேராசிரியர்:ஸ்ரீ.பிரசாந்தன், அ.வாசுதேவா

**விருதுபெறும் சான்றோர்**

சண்முகநாதன் சுகந்தன் அவர்களால் நிறுவப்பட்ட
திருமதி.இரத்தினமணி சண்முகநாதன் ஞாபகார்த்த கலைப் பணிக்கான உயர்விருது பெறுபவர்
**கலாபூசணம்.மா.அனந்தராஜன்**

பரா.நமேஸ் அவர்களால் நிறுவப்பட்ட
திரு திருமதி பரராஜசிங்கம் பரமேஸ்வரி ஞாபகார்த்த சொல் வன்மைக்கான உயர்விருது பெறுபவர்
**தமிழருவி.த.சிவகுமாரன்**

*விழா சிறப்புற வாழ்த்துவோர்:-*

கணபதிப்பிள்ளை பஞ்சலிங்கம் குடும்பத்தினர், புலோலி
திருமதி.தனலட்சுமி இராசரத்தினம், கணேஸ் ஸ்ரோர்ஸ்- சாமி மலை (சின்னத்தாய்)
சிதம்பரப்பிள்ளை ஸ்ரீரகுராம், ஸ்ரீரகுராம் சாய்ஸ்ரீ - மேலைப்புலோலி
சின்னத்தம்பி இரஞ்சன் (கணக்காளர்) - கனடா

(C-5825)

# உலக உணவு பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு விசேட பரிசோதனைகள்

(கொழும்பு)

உலக உணவுப்பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் விசேட உணவுப்பாதுகாப்பு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது முழங்காவில், ஜெயபுரம், பூநகரி பிரிவுகளில் இந்த விசேட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பூநகரி மேற்பார்வை பொதுசுகாதார பரிசோதகர், கிளிநொச்சி மாவட்ட உணவு மருந்துப் பரிசோதகர் மற்றும் பிரிவு பொது சுகாதார பரிசோதகர்கள் குழுவாக இணைந்து இந்தப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது சுகாதார விதிமுறைகளை மீறி பிளாஸ்டிக், பொலித்தீனுடன் தொடுகையில் வைத்திருந்த சூடான உணவுகள் கைப்பற்றி அழிக்கப்பட்டதோடு, அடிப்படை சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை மீறி உணவு கையாளல் நடைமுறைகளில் ஈடுபட்டவர்களுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

தொடர் பரிசோதனைகளில் முன்னேற்றம் ஏற்படாதுவிடின் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் எனவும் வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(3-30)

# தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை பதவி வெற்றிடம்

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையில் பின்வரும் ஆளணிக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்கலாம்.

| இல | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | தகைமை |
|---|---|---|---|
| 01 | நிதி உதவியாளர் | 02 | * உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்திருத்தல் (HNDA மேலதிக தகுதியாகக் கொள்ளப்படும்)<br>* ஆங்கிலம் மற்றும் கணனி அறிவு. |
| 02 | தாதிய உதவியாளர் | 02 | * தாதிய டிப்ளோமா<br>* ஒரு வருட வேலை அனுபவம் |
| 03 | முதியோர் பராமரிப்பாளர் | 02 | * துறை சார்ந்த அனுபவம் |
| 04 | வெளிக்கள உத்தியோகத்தர் | 01 | * AD சாரதி அனுமதிப்பத்திரம்<br>* துறை சார்ந்த அனுபவம் |
| 05 | சுத்திகரிப்பாளர் | 02 | * துறை சார்ந்த அனுபவம் |
| 06 | தொழிலாளி 02 | 02 | * துறை சார்ந்த அனுபவம் |

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களின் சுயவிபரத்தினை tellicoophospital@gmail.com என்னும் முகவரியூடாகவும், 0767711417 என்ற Whatsapp இலக்கத்தினூடாகவும் எதிர்வரும் 25.06.2026 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
மேலதிக தகவல்களுக்கு : 077 6367378, 077 2380196

**தலைவர்,**
**தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை,**
**தெல்லிப்பளை**

(C-5824)

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை : பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : ஆறுமுகம் சண்முகானந்தன்
சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர்: P.துரையப்பா

முகவரி: ஆதன இல:25/20, வீதி: புத்தடி வீதி,வடலியடைப்பு, வட்டாரம் -06

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 06 புத்தடி வீதியில் இவ் ஆதனம் அமைந்துள்ளது.இவ் ஆதனம் நந்தகுமார் பெண் கலாதேவிக்கு பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 3300/27.05.2002 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் பிரசித்த நொத்தாரிஸ் ப.இராசகுரு முகதாவில் 3912/2003.04.23 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் ஆறுமுகம் சண்முகானந்தன் என்பவர்களுக்கு சொந்தமாகியது.

மேலும் குறித்த ஆதனத்தை உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.புஸ்பராஜா அவர்களால் அளந்து வரையப்பட்ட 1087ஆம் இலக்க 2002.05.25 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு நான்கு (4)குளி பதினொன்று தசம் ஏழு(11.7)ஆக காணப்படுகின்றது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்கு பகுதி சங்கானை கோவிற்பற்று சங்கானைமேற்கு இறை "தம்பாளை" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 04 குளி 11.7 ஆகும்.

இதன் எல்லைகள்
**வடக்கு** - பொன்னையா கந்தசாமிக்கும் மறுபேருக்கும் தம்பையா மகள் நாகேஸ்வரிக்குமுரிய ஆதனம்
**கிழக்கு** -குலேந்திரன் பெண் சரஸ்வதிக்குரிய காணியும் குறித்த காணிக்கும் ஏனைய துண்டுகளாகிய 2ஆம் 5ஆம் 6ஆம் காணிகளுக்கும் போக்குவரத்துச் செய்யும் ஆறு முழ அகலமான பாதை முகப்பும் 2ஆம் துண்டு மிகுதிக் காணியும்
**மேற்கு** - முத்தையா பெண் நாகரத்தினத்துக்குரிய ஆதனம்
**தெற்கு** - வீரசிங்கம் அழகரத்தினத்துக்குரிய ஆதனம்

இவ்வாதனத்தை **ஆறுமுகம் சண்முகானந்தன்** என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

(7835)

# செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சமூக சேவா சங்கத்தின் பாலர் பகல் விடுதியும் முன்பள்ளி செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாலர் பகல் விடுதி விளையாட்டு மண்டபத்தில் சமூக சேவா சங்கத்தின் உப தலைவர் ஆ.சக்திவடிவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக மாவட்ட அலுவலக நன்னடத்தை உத்தியோகத்தர் சண்முகலிங்கம் சதீஸ், யா/சரவணபவானந்த வித்தியாலய பிரதி அதிபர் திருமதி.நிமலா லோகேஸ்வரன், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேற்பார்வை குடும்ப சுகாதார உத்தியோகத்தர் திருமதி.ஜாமினி யேசுதராஜா, கோப்பாய் வடக்கு-கிராம உத்தியோகத்தர் திருமதி. விஜயதர்சினி மோகனதாஸ் மற்றும் தொண்டு ஆர்வலர்களான இந்திரன் ரஜினி குடும்பத்தினரும் கலந்து கொள்ளவுள்ளனர். (3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# ஈரான் மீதான தாக்குதல்களை தற்காலிகமாக ரத்து செய்தார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

**ஈரானிய உயர்மட்டத் தலைமைகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, அந்த நாட்டின் மீது திட்டமிடப்பட்டிருந்த வான்வழித் தாக்குதல்கள் மற்றும் குண்டு வீச்சுகளைத் தான் ரத்து செய்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**



முன்னதாக ஈரான் மீது அமெரிக்கா மிகக் கடுமையான தாக்குதல்களை நடத்தும் என்றும், ஈரானின் கார்க்தீவு உள்ளிட்ட முக்கிய எண்ணெய் உட்கட்டமைப்பு மையங்களை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

இதே வேளை, அமெரிக்கா நடத்திய தாக்குதல்களுக்கு ஈரான் வெளியுறவு அமைச்சகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையானது இரு நாடுகளுக்கும் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தத்தை "முற்றிலும் அர்த்த மற்றதாக" மாற்றி விட்டதாகக் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில், பிராந்தியத்தில் உள்ள அமெரிக்கப் படைகளைக் குறி வைத்து குவைத், பஹ்ரைன் மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகள் மீது ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவற்படை பதிலடித் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக ஈரானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

## பிரதமர் மோடியைச் சந்தித்தார் முதல்வர் ஜோசப் விஜய்



(டில்லி)

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை முதல்வர் சி. ஜோசப் விஜய் சந்தித்துள்ளார்.

மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக டில்லி சென்றுள்ள, முதல்வர் ஜோசப் விஜய், நேற்று முன்தினம் நடைபெற்ற நீதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார்.

நீதி ஆயோக்கின் 11 ஆவது ஆட்சிமன்றக் குழுக்கூட்டம் நிறைவடைந்த பின்னர், பிரதமர் நரேந்திர மோடியை புதுடில்லியிலுள்ள குடியரசுத் தலைவர் மாளிகை கலாசார மையத்தில், முதல்வர் ஜோசப் விஜய் சந்தித்துப் பேசியுள்ளார். (நி)

## இமய மலைப் பிராந்தியத்துக்கு இரட்டை ஆபத்து வறட்சி வெள்ளம் ஏற்படும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கை



(டில்லி)

புவி வெப்பமயமாதல் காரணமாக இமயமலை பிராந்தியத்தில் வழக்கத்தை விட வெயில் அதிகமாக பதிவாக வாய்ப்புள்ளது.

இந்து குஷ் இமயமலை பிராந்தியத்தில் இந்த ஆண்டு பருவ மழை குறைவாகவே இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அங்கு வறட்சி மற்றும் திடீர் வெள்ளம் ஆகிய இருவேறு ஆபத்துகள் ஒரே நேரத்தில் ஏற்படும் என்று விஞ்ஞானிகள் அதிர்ச்சி எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த பிராந்தியமானது இந்தியா, நேபாளம், [illegible] நாடுகளில் பரந்து விரிந்து, சுமார் 200 கோடி மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்குகிறது. புவி வெப்பமயமாதல் காரணமாக இங்கு வழக்கத்தை விட வெயில் அதிகமாக பதிவாக வாய்ப்புள்ளது.


நீண்ட நாட்களுக்கு வறண்ட வானிலை நிலவினாலும், திடீரென குறுகிய காலத்தில் கொட்டித் தீர்க்கும் அதிபயங்கர மழையால் கடுமையான நிலச்சரிவுகளும், திடீர் பெருவெள்ளமும் ஏற்படும் என்று "இசி மோட்" பருவநிலை அமைப்பு எச்சரித்துள்ளது.

இதனால் விவசாயம் மற்றும் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படலாம் என்பதால் விழிப்புடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் இரட்டை வேடத்தை உலகிற்கு தோலுரித்துக் காட்டிய ஈரான்

**(டெஹ்ற்ரான்)---------------- அமெரிக்காவுடனான சாத்தியமான உடன்படிக்கை குறித்து ஈரான் இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை என்றும் பேச்சுவார்த்தைகளில் தனது "சிவப்பு கோடுகளை" ஒரு போதும் விட்டுக் கொடுக்காது என்றும் ஈரானிய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் இஸ் மாயில் பாகேய் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.**



ஈரானின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

உடன்படிக்கை கையெழுத்தாகும் நேரம் மற்றும் இடம் குறித்து வெளியாகும் தகவல்கள் யாவும் வெறும் ஊகங்கள் மட்டுமே என்றும்,

இதுவரை எதுவும் இறுதி செய்யப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இருதரப்பு பேச்சுவார்த்தை உரையின் பெரும் பகுதி ஏற்கனவே இறுதி செய்யப்பட்டுவிட்ட போதிலும், பேச்சுவார்த்தையின் போது அமெரிக்கா தனது நிலைப்பாடுகளைத் தொடர்ந்து பலமுறை மாற்றிக் கொண்டதே தற்போதைய இழுபறிக்கு முக்கிய காரணம் என்று இஸ்மாயில் பாகேய் குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈரானுடனான போர் நிறுத்தம் மற்றும் உடன்படிக்கை குறித்துப் பேசி வரும் நிலையில், ஈரான் தரப்பிலிருந்து இந்த அதிகாரப்பூர்வ மறுப்பு வெளியாகியுள்ளது என ரொய்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (நி)

# தாய்லாந்து இளவரசி பஜ்ரகிதியாபா காலமானார்

(தாய்லாந்து)


தாய்லாந்து மன்னர் வஜிரா லோங்கோர்னின் மூத்த மகளும், அந்நாட்டு அரச குடும்பத்தின் மிக முக்கியமான ஆளுமையுமான இளவரசி பஜ்ரகிதியாபா தனது 47ஆவது வயதில் காலமானார். கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக கோமா நிலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தாய்லாந்து அரச மாளிகை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.



கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தனது நாய்களுக்குப் பயிற்சியளித்துக் கொண்டிருந்த போது அவர் திடீரென மயங்கி விழுந்தார். அவரது இதயத்தில் ஏற்பட்ட 'மைகோபிளாஸ்மா' தொற்றினால் கடும் இதயத் துடிப்பு சீர்குலைவு ஏற்பட்டதே இதற்குக் காரணம் என வைத்தியர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

சுமார் மூன்றரை ஆண்டுகள் பாங்கொக்கில் உள்ள சுலாலோங்கோர்ன் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர், நேற்று முன்தினம் வியாழக்கிழமை அந்நாட்டு நேரப்படி இரவு 7:48 மணிக்கு காலமானதாக அரண்மனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# பூமிப்பந்தையே உலுக்கப் போகும் எல் நினோ



(வோஷிங்டன்)

பசுபிக் சமுத்திரத்தின் வெப்பமண்டலப் பகுதியில் தற்போது "எல் நினோ" காலநிலை நிலைமைகள் ஏற்பட்டுள்ளன என்றும், இதன் காரணமாகக் கடந்த சில மாதங்களில் கடல் மேற்பரப்பின் வெப்பநிலை கணிசமாக அதிகரித்துள்ளது என்றும் அமெரிக்காவின் தேசிய சமுத்திர மற்றும் வளிமண்டல நிர்வாகம் அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது.

இந்தத் திடீர் வெப்பநிலை அதிகரிப்பானது ஒட்டுமொத்த உலகளாவிய வானிலை அமைப்பிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

பசுபிக் கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள இந்த விசித்திர வெப்பநிலை மாற்றங்கள் காரணமாக, உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளில் கடுமையான வறட்சி போன்ற அசாதாரணக் காலநிலை பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கான
# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது 2026 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டிற்கான முழு நேர கற்கைநெறிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 1 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளன.

இக்கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெற்று வருகின்றன.

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், அறை பராமரிப்பு சேவையாளர், நீர்க்குழாய் பொருத்துனர்,முச்சக்கர வண்டி பொறிவலர், அலுமினியம் பொருத்துனர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களிற்கான ஆடைவடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக்கலை வல்லுநர், விரைவுசேவை உணவு வழங்குநர், முதியோர் பராமரிப்பாளர், டீசல் பெற்றோல் வாகன இயந்திர பொறிவலர், கட்டட நிர்மான உதவியாளர், கணனி வன்பொருள் திருத்துனர், கணனி படவரைஞர், குளிரூட்டி மற்றும் வளிசீராக்கி திருத்துனர், மரவேலை தொழிநுட்பவியலாளர் போன்ற கற்கைநெறிகளிற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம் - 4 (NVQ-4) சான்றிதழுக்கான பயிற்சி நெறிகளாகும்.

கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 19.06.2026ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களினை பெற்றுக் கொள்வதற்கு 021 222 7949 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1998- இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி-பா-19 3/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSC,Demo
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16926

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
கி-பா-23
உயரம்:6"
தகைமை/தொழில்- A/L, Police
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16927

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
கி-பா-10 1/4
உயரம்:5'9"
தகைமை/தொழில்: A/L,Work
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16929

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
7இல்சூரி செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்-A/L,Rice Mill (own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16932

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்: பரணி
7இல் சூரிசெவ் உயரம்:5'8"
தகைமை/தொழில்: BA, Accountant (pvt)
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/16934

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1996- இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி-பா:5 ¾
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bsc,Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/16936

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்:சதயம்
கி-பா-13
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: College, Teacher
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/16938

பிறப்பு-1996-NRC
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.pharm, MBA, MSC,Pharmacist
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/16940

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
7இல்செவ்
உயரம்: 5'
தகைமை/தொழில்-Degree,DO
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/16943

பிறப்பு-1996 - இந்து
நட்சத்திரம்-பூசம் 10இல்சூரிசெவ்
கி-பா- 30 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSC,Work(pvt)
எதிர்பார்ப்பு : உத்தியோகம்
தொ.இ: G/16946

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 600



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அந்த எட்டுப் பேர்!

ஒரு பள்ளிக்கூடம். அதிலே வசதியான வீட்டுப்பிள்ளை ஒருத்தன் படித்துக் கொண்டிருந்தான். இன்னொரு ஏழைப் பையனும் அங்கே படித்துக் கொண்டிருந்தான். இவர்கள் இரண்டு பேரும் ஒரே தெருவிலேதான் இருந்தார்கள். பணக்கார வீட்டுப் பையன் பங்களாவிலே இருந்தான். அவனுக்கு வேலை செய்வதற்காக சில வேலை ஆட்கள் உண்டு. அவன் நல்லா சாப்பிடுவான், தூங்குவான்.

ஏதோ வரவேண்டுமே என்பதற்காக பள்ளிக்கூடம் வருவான் போவான் அவ்வளவுதான். இந்த ஏழைப்பையன் அப்படி இல்லை. காலையிலே எழுந்திருப்பான். உடற்பயிற்சி பண்ணுவான். அவங்க வீட்டுல கிடைக்கிற சாதாரண உணவு. அதை அளவோட சாப்பி டுவான். வீட்டுலே உள்ள வேலைகளையும் செய்வான்.பள்ளிக்கும் தவறாமல் வந்துவிடுவான். அவனுக்குக் கூடப் பிறந்த சகோதர - சகோதரிகள் எட்டுபேர். எல்லாரும் தன்னம் பிக்கையோட அவங்க அவங்க வேலையைச் செய்து கொண்டிருந்தாங்க. இந்தப்பையன் எப்பவும் உண்மையைத்தான் பேசுவான். கடமையை ஒழுங்காகச் செய்வான்.

ஆசிரியர்களுக்கு இவனை மிகவும் பிடிக்கும்.அதனாலே இவனை அந்தப் பள்ளிக்கூடத்து மாணவர் தலைவனாக ஆக்கியி ருந்தார்கள். இது அந்த பெரிய இடத்துப் பையனுக்குப் பிடிக்கவில்லை. மாணவர் தலைவனுக்குப் பணிந்து போகவும் அவனுக்கு விருப்பம் இல்லை.

ஒரு நாள் வகுப்பிலே ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் ஒரு வேலை கொடுத்தார். எல்லோரும் அதை சுறுசுறுப்பா செய்து கொண்டிருந்தார்கள். இவன் மட்டும் சோம்பலாக உக்கார்ந் திருந்தான். ஆசிரியர் அந்தப் பக்கமா வந்தார். இதைப் பார்த்து ட்டார். உடனே மாணவர் தலைவனாயிருக்கிற அந்த ஏழைப் பையனைக்கூப்பிட்டார்.ஏன் அந்தப் பையன் இப்படி சும்மா உட்கார்ந்திருக்கிறான் ஏன் என்று விசாரிச்சு சொல்லு!" என்று சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டார். இவன் மெதுவாகப் போய் அவனிடம் விசாரித்தான். "ஏன் இப்படி சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறாய்?"என்று . அவன் மிகவும் அலட்சியமாக இவனைப் பார்த்தான். "என்னுடைய சிரமம் உனக்கென்ன தெரியும்? வீட்டுலே சௌகரியங்களைக் கவனிக்கிற என்னுடைய வேலையாட்கள் இரண்டு பேரும் இன்றைக்கு வேலைக்கு வரவில்லை. அதனால் என்னுடைய வேலையெல்லாம் நானே கவனிக்கிற மாதிரி ஆகிவிட்டது! அதனாலே சோர்ந்து போய்விட்டேன்!" என்றான். பின்பு கேட்டான், அது சரி.. உன்னுடைய வீட்டில் உன்னுடைய வேலைக்காரர்கள் வராத போது நீ எப்படி சமாளிக் கிறாய்? என்று கிண்டலாகக் கேட்டான். இவன் ஏழை என்பதையும் இவன் வீட்டில் வேலை செய்வதற்குக்கு யாரும் இல்லை என்பதையும் இப்படிச் செய்யிறதுக்கு சொல்லி கிண்டல் செய்கிறான்.

இந்த ஏழைப்பையனுக்கும் இது புரிந்தது மனசு வேதனைப்பட்டது இருந்தாலும், வெளியே காட்டிக்கொள்ளாமல் சிரித்துக் கொண்டே "எனக்கு அந்தக் கவலையே கிடையாது! என்னுடைய உதவிக்கு நான் நினைத்தவுடனே காரியத்தை செய்ய எட்டுப்பேர எப்போதும் தயாராக இருக்கிறார்கள்!" அப்படி என்றான். இவன் இப்படிச் சொன்னதும் அவனுக்கு ஒரு மாதிரியாக ஆகிவிட்டது. தலையைக் குனிந்தபடியே போய் விட்டான். உள்ளே உட்கார்ந்திருந்த ஆசிரியர் காதிலே இது விழுந்தது.

உடனே அந்த ஏழைப்பையனை உள்ளே கூப்பிட்டார். அவன் போனான். இவன் பொய் சொல்ல மாட்டான் என்று அவருக்குத் தெரியும் அவனை சமாளிக்கறதுக்கு இவன் இப்படி ஒரு பொய் சொல்லியிருப்பான் என்பதையும் அவராலே ஏற்றுகொள்ள முடியவில்லை, "ஏனப்பா .. நீ நினைக்கிற காரியத்தைச் செய்ய எட்டுப் பேர் தயாரா இருக்கிறதாகச் சொன்னாயே... உன்னுடைய சகோதர சகோதரிகளைக் குறிப்பிட்டு அப்படிச் சொன்னாயா?" என்று கேட்டார் ஆசிரியர்.

"இல்லை ஐயா- நான் அவர்களைக் குறிப்பிட்டு அப்படிச் சொல்லவே!" இல்லை என்றான் "அப்படி என்றால் பொய் சொன்னாயா, இந்தச் சின்ன விடயத்துக்கு அப்படி பொய் சொல்லலாமா?" என்றார். "ஐயா... நான் பொய்யும் சொல்லவில்லை!" என்றான். "அப்படியானால் நீ சொன்னதுக்கு என்ன அர்த்தம்?" என்றார். இப்ப, அந்தப் பையன் சொல்கிறான், "ஐயா! நான் நினைக்கிறதை செய்து முடிக்க என்னுடன் இருக்கிற அந்த எட்டுபேர் யாரென்றால் இரண்டு கால்கள், இரண்டு கைகள், வாய், மூக்கு, கண், காது... ஆக மொத்தம் எட்டு..இவர்கள் தான் அந்த வேலை ஆட்கள்! நான் சொல்வதைக் கேட்பதற்கு அவர்கள் எப்போதும் தயார். அந்த அளவுக்கு என்னுடைய பயிற்சிகள், பழக்க வழக்கங்கள் மூலமாக அவற்றை நல்ல நிலைமையில் வைத்திருக்கிறேன்!" என்றான்.

இந்த கதையை சுவாமி சின்மயானந்தர் சொல்வது வழக்கம். இயற்கை நமக்குக் கொடுத்திருக்கிற வேலையாட்கள் இந்த / எட்டுப் பேரும்! இவர்களை நல்ல முறையிலே வைத்திருந்து- வேலை வாங்க வேண்டியது நமது கடமை, அந்தக் கடமையை ஒழுங்காக செய்துகொண்டு வந்தால் வாழ்க்கையிலே வெற்றி நிச்சயம்! இல்லை என்றால் குழப்பம்தான்! புத்தி சரியாக இல்லை என்றால் இந்த வேலையாட்கள் நாம் சொல்வதைக் கேட்க மாட்டார்கள்! ஒருத்தன் குடி போதையிலே தள்ளாடி தள்ளாடி போய் ஒரு மரத்தில் மோதினான். தலையில் கட்டுப் போட்டுக்கொண்டு மறுநாள் வந்தான். "ஏன்டா இப்படி செய்கிறாய்?" என்று கேட்டார்கள். "நான் ஒதுங்கிப் போ என்று தான் சொன்னேன்! அது கேட்கவில்லை" என்றான். "எது கேட்கவில்லை...? உன்னுடைய காலா ?"- என்று கேட்டார்!". "இல்லை அந்த மரம்!" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் வீசிய கடும் காற்று

# போக்குவரத்து, மின்விநியோகம் தடை

(பரந்தன்)

**நாட்டில் நிலவி வரும் காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலையால் கிளிநொச்சி மாவட்டத்தில் பல இடங்களில் பாதிப்புகள் பதிவாகியுள்ளன.**



நேற்று கிளிநொச்சி பரந்தன் பொதுச் சந்தைப் பகுதியில் வீசிய கடும் காற்றின் காரணமாக, அங்கிருந்த பாலைமரம் ஒன்று முறிந்து அருகிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் மீது வீழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவத்தினால் குறித்த வர்த்தக நிலையம் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, மரம் விழுந்ததன் காரணமாக வர்த்தக நிலையத்தின் வழக்கமான வணிக நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கண்டி ஹந்தானை வழியாக கலஹா நோக்கிச் செல்லும் பிரதான வீதியின் உடுவெல பகுதியில் பாரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்துள்ளது.

கடும் மழை மற்றும் பலத்த காற்றின் தாக்கம் காரணமாக இந்த மரம் வீதியின் மீது சரிந்து விழுந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தால் அப்பகுதியில் அமைந்திருந்த பாரிய மின்சார தூண்களும் உடைந்து சேதமடைந்துள்ளன. இதன் காரணமாக போக்குவரத்துக்கும் மின்விநியோகத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அவசர சேவைப் பிரிவினர் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதுடன், வீதியை சீரமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து நிலவும் மோசமான வானிலையைக் கருத்திற் கொண்டு மரங்களுக்கு அருகிலும் அபாயகரமான பகுதிகளிலும் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (3-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 200 | 450 | 320 | 400 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 180 | -- | 200 | -- |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 400 | 450 | 600 | 450 |
| தக்காளி | 800 | 650 | 800 | 800 | 600 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 200 | 150 | 200 | 200 |
| கோவா | 300 | 250 | 350 | 260 | 250 | 250 |
| கரட் | 400 | 450 | 500 | 350 | 400 | 450 |
| பூசணி | 120 | 130 | 120 | 110 | 150 | 80 |
| புடோல் | 200 | 160 | 200 | 200 | 300 | 200 |
| வாழைக்காய் | 120 | 80 | 100 | 100 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 450 | 400 | -- |
| பெரிய வெங்காயம் | 220 | 330 | 250 | -- | 200 | -- |
| பாகற்காய் | 1300 | 1500 | 2000 | 1600 | 1400 | 800 |
| வெண்டக்காய் | 200 | 150 | 300 | 150 | 300 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 200 | 350 | 400 | -- |
| பயற்றங்காய் | 300 | 300 | 300 | 400 | 300 | 250 |
| லீக்ஸ் | 450 | 480 | 500 | 400 | 350 | -- |
| பீற்றூட் | 350 | 400 | 500 | 250 | 500 | 400 |
| கறிமிளகாய் | 600 | 500 | 500 | 400 | 450 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 450 | 700 | 650 | 500 |
| போஞ்சி | 650 | 650 | 600 | 400 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 150 | 300 | -- | 300 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 50 | 150 | 80 | 100 | -- |
| தேசிக்காய் | 500 | 400 | 400 | 400 | 500 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 80 | 120 | 100-140 | -- |
| இராசவள்ளி | 350 | 450 | 350 | 350 | 300 | -- |
| வெங்காயப்பூ | 600 | 400 | 800 | 420 | 400 | -- |
| முள்ளங்கி | 200 | 260 | 200 | 180 | 250 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 200 | -- | 50 | -- |
| வல்லாரை | 100 | 70 | 80 | -- | 100 | -- |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | 250 | --- |

# மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஜனசக்தி சனசமூக நிலையத்தின் மாபெரும் 78 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியிலான 50 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி நாளை ஞாயிற்று க்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவு ள்ளது.

பங்குபற்ற விரும்பும் வீரர்கள் 077 641 1536 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியுமென சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (3)

# இராசிபலன்

13.06.2026
வைகாசி 30, சனிக்கிழமை
திரயோதசி பிற்பகல் 2.16 மணிவரை

கார்த்திகை பின்னிரவு 12.26 மணிவரை
சுப நேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22மணிவரை
கார்த்திகை விரதம்

சந்திராஷ்டமம்:சித்திரை, சுவாதி

வளவன்

**மேஷம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**கடகம்** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பணப்புழக்கம் கூடும்.

**துலாம்** மறதியால் ஒரு சில பணிகளை செய்யாமல் விட்டு விடுவீர்கள், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், முன்னேற்றம் பெற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மகரம்** பிள்ளைகளில் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம்.

**மிதுனம்** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.

**கன்னி** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**தனுசு** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், வியாபார விரோதம் விலகும், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், செய்தொழில் மேன்மையுண்டு.

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த திருப்பங்களைக் காணலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.

**உங்கள் பிரச்சினைகளுக்கான பதில் உங்களிடம் தான் உள்ளது.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

1064





நான் செய்த பிழையை மன்னிக்க வேண்டும். இந்த வீட்டில் தாங்கள் திடீரென்று பிரவேசித்த போது, தாங்கள்தான் என்பதை என்னால் நிச்சயமாக அறிய முடியவில்லை. அதனால் தங்களுடைய பேச்சை ஒட்டுக் கேட்கும்படி நேர்ந்தது, மன்னிக்க வேண்டும்!" என்றாள் குந்தவை.

"தாயே! நான் உன்னை மன்னிப்பதற்கு ஒரு காரணமும் ஏற்படவில்லை. உன்னிடந்தான் நான் மன்னிப்புக் கேட்க வேண்டும். மன்னிப்புக் கோரத் தகுதியுடையவனா என்பதே எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. இன்றிரவுக்குள் கடம்பூர் சென்று, பட்டத்து இளவரசருக்கு எதுவும் நேராமல் தடுத்தேனானால், உன்னிடம் மன்னிப்புக் கோருவதற்கு நான் தகுதி பெறுவேன்.

மூன்று வருடங்களாக இந்தக் கிழவனின் கண்கள், மோகாந்தகாரத்தினால் மூடியிருந்தன. என் கண்களைத் திறப்பதற்கு நீ எவ்வளவோ பிரயத்தனம் செய்தாய். எத்தனையோ குறிப்புகள் சொன்னாய். ஒன்றும் என் காதில் ஏறவில்லை. என் சகோதரன் காலாந்தக கண்டனும் என் கண்களைத் திறக்க முயன்றான். அவன் முயற்சியும் பலிக்கவில்லை. நேற்றிரவு துர்க்கா பரமேசுவரியின் கருணையினால் பாண்டிய நாட்டுச் சதிகாரர்கள் இருவரின் சம்பாஷணையை ஒட்டுக் கேட்க நேர்ந்தது. அதன் பலனாகவே உண்மையை அறிந்தேன். அந்தச் சண்டாளியை, சதிகாரியை, விஷநாகத்தை, என் அரண்மனையிலேயே வைத்திருந்து பாலூட்டிச் சீராட்டி வளர்த்தேன். அவள் என்னைக் குலத்துரோகியாக்கினாள் இராஜத் துரோகியாக்கினாள். சோழநாட்டுப் பொக்கிஷத்திலிருந்த பொருளை எடுத்துப் பாண்டியநாட்டுச் சதிகாரர்களுக்குக் கொடுத்தாள். அந்தப் பாதகி நந்தினியை இன்று இரவு கழிவதற்குள் என் கையினாலேயே கொன்றாலொழிய என் நெஞ்சில் கொழுந்துவிடும் நெருப்பு அணையாது"

இவ்வாறு பழுவேட்டரையர் கூறி வந்தபோது அவர் சற்று எதிர்பாராத ஒரு காரியத்தைக் குந்தவை செய்தாள். திடீரென்று அவர் காலடியில் விழுந்து வணங்கினாள். பழுவேட்டரையர் இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றபோது, இளையபிராட்டி எழுந்து நின்று, "ஐயா! எனக்கு ஒரு வரம் கொடுத்து அருள வேண்டும்!" என்றாள்.


"இளவரசி என்னைச் சோதிக்கிறாய் போலத் தோன்றுகிறது. வேண்டாம்! என்னுடைய பாவச் செயல்கள் எவ்வளவு பயங்கரமானவை என்பதை நன்கு உணர்ந்து கொண்டேன். அவற்றுக்கு என்ன பிராயச்சித்தம் செய்து கொள்வது என்றுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அதற்கு முன்னால், இன்றையக் கண்டத்திலிருந்து சோழ குலத்தைச் சேர்ந்த மூன்று பேரையும் தப்புவித்தாக வேண்டும். உன் தந்தைக்கும், சகோதரர்களுக்கும் இன்று தீங்கு ஒன்றும் நேரிடாமலிருக்க வேண்டும். அதற்கு எனக்கு உதவி செய். இன்று ஒருநாள் போகட்டும், நாளைக்கு நானே உன்னிடம் வந்து, "எனக்கு தண்டனை என்ன?" "பிராயசித்தம் என்ன?" என்று கேட்பேன்!" என்றார்.

(தொடரும்)



## சிறுவர் அரங்கம்

### பள்ளிக்குச் சென்ற சிட்டுக்குருவிகள்



(நேற்றைய தொடர்ச்சி)

சீருடையோடு அவை தத்தித் தத்தி நடந்து சென்ற காட்சி அழகைக் கண்டு அரச மரத்துப் பறவைகளெல்லாம் மகிழ்ச்சி கொண்டன.

எல்லாப் பறவைகளின் வாழ்த்துக்களோடு அவை பள்ளிக் கூடத்திற்குப் போய்ச் சேர்ந்தன.

மழலையர் வகுப்பில் அவற்றை உட்கார வைத்து விட்டு, அம்மாச் சிட்டு அரசமரத்திற்குத் திரும்பியது. பிறகு இரை தேடச் சென்று தன் குஞ்சுகளுக்குப் பள்ளிக் கூடத்தில் பகல் உணவு கொண்டு போய்க் கொடுத்தது.

மாலை நான்கு மணிக்கு மீண்டும் சென்று கூட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்தது. வகுப்பில் இருந்த பிள்ளைகளுக்கு இந்த சிட்டுக்குருவிகள் படிக்க வந்ததிலிருந்தே ஒரே கொண்டாட்டம். ஆசிரியை, வராத நேரங்களில் இந்தக் குருவிகளோடு எல்லாக் குழந்தைகளும் விளையாடின.

வர, வரப் பிள்ளைகளின் கவனம் பாடத்தில் செல்லாமல், சிட்டுக் குருவிகளோடு விளையாடுவதிலேயே காலம் சென்றது. இதனால் அந்த மாதத் தேர்வில் எல்லாப் பிள்ளைகளுக்கும் மதிப்பெண் குறைந்து விட்டது.

தலைமை ஆசிரியை வகுப்பறைக்கு வந்து அந்த வகுப்பு ஆசிரியையைக் கோபித்துக் கொண்டாள்.

அந்த வகுப்பு ஆசிரியை, "குழந்தைகளின் மதிப்பெண் குறைந்ததற்குக் காரணம், இந்தச் சிட்டுக் குருவிகள் தான்!" என்று கூறினாள்.

அதனால், தலைமை ஆசிரியை, அம்மாச் சிட்டைக் கூப்பிட்டுக் கண்டித்தாள். "அடுத்த மாதமும் இதே மாதிரி மதிப்பெண் குறைந்தால், இரண்டு சிட்டுக் குஞ்சுகளையும் பள்ளிக் கூடத்தை விட்டு நிறுத்தி விடுவேன்" என்று திட்டமாகச் சொல்லி விட்டாள்.

அன்று மாலை, பள்ளி விட்டுத் திரும்பிய சிட்டுக் குஞ்சுகளுக்கு நல்ல திட்டுக் கிடைத்தது. அம்மாச் சிட்டு மிகச் சினத்தோடு பேசியது. "இனிமேல் விளையாட்டைக் குறைத்துக் கொள்கிறோம்" என்று அந்தச் சிட்டுக் குஞ்சுகள் உறுதியளித்தன. ஒருவாரம் கழித்து ஒரு நாள் தலைமையாசிரியை எங்கோ பேருந்தில் போய் வந்தாள்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இறந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையே மரணத்துக்கான போராட்டம் தான் புரட்சி.
~ பிடல் காஸ்ட்ரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரபிக் குதிரையாயினும் பிறவிக் குணம் மாறாது

ஓர் ஊரில் மிகப்பெரும் அக்கிரமங்களும் அநீதிகளும் தலைவிரித்தாடுகின்றன. நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே நபிகள் நாயகம் தனது தூதுவர்களை அனுப்பி அந்த ஊரை அழித்து விடுமாறு கூறுகிறார்.

நபிகள் நாயகத்தின் கட்டளைகளை ஏற்று அந்த ஊரை அழிக்க தூதுவர்கள் அங்கு செல்கிறார்கள். அந்த ஊரில் ஒரு பெரிய பள்ளிவாசல், அங்கு ஒரு பெரியவர் ஐந்து நேரமும் தொழுகையில் ஈடுபட்ட வண்ணம் உள்ளார்.

அவரைக் கண்ட தூதுவர்கள் அந்தப் பெரியவரையும் அழிக்க வேண்டுமா? சதா வழிபடும் அவரை எப்படி அழிப்பது என்ற சந்தேகம் மேலிட, மீளவும் நபிகள் நாயகம் இருக்கும் இடத்திற்குச் சென்ற தூதுவர்கள்; இறையீர்! நீங்கள் கூறியபடி அந்த ஊரை அழிக்க அங்கு சென்றோம்.

ஒரு பெரியவர் உங்களை நினைத்த வண்ணம் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கிறார். அவரையும் கொல்வதா? என்று கேட்டார்கள்.அதற்கு நபிகள் நாயகம் அவரைத்தான் முதலில் கொல்லுங்கள் என்றார். தூதுவர்கள் அதிர்ந்து போயினர்.

அதற்கு நபிகள் நாயகம் சொல்கிறார்; அந்த ஊரில் அநீதியும் அக்கிரமமும் தலைவிரித்தாடும் போது, அதனைத் தடுத்து நிறுத்தி, தர்மத்தை எடுத்துக் கூற வேண்டிய அந்தப் பெரியவர் தனது கடமையைச் செய்யாமல் தொழுகையில் ஈடுபடுவதால் என்ன பயன். ஆகையால் அவரை முதலில் கொல்லுங்கள் எனக் கட்டளையிடுகிறார்.

இந்தக் கதையை நாம் கூறும்போது, இஃது இப்போது எதற்கு என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

ஆம், கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் ஆற்றிய உரையைப் பார்த்தபோதுதான் மேற்போந்த கதை ஞாபகத்திற்கு வந்தது.

ஆம், ரோகண விஜயவீரவைக் கொன்ற போது அவரது மகனைப் பாதுகாத்த அரசு, ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் தற்கொலைத் தாக்குதலை நடத்திய சஹ்ரானின் மகளைக் காப்பாற்றிய அரசு, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனைக் கொன்றது ஏன்? இவ்வாறு பாலச்சந்திரனை சுட்டுக் கொன்றது யுத்தக் குற்றமாகும். அதனை யுத்தக்குற்றமாக விசாரிக்க வேண்டும் எனக் கோரியுள்ளார்.

அட, வன்னி யுத்தத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்ட போது – சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்கள் முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்ட போதெல்லாம் அன்றைய அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்த ரவூப் ஹக்கீம் இப்போது நீலிக்கண்ணீர் வடிப்பது தான் ஆச்சரியமாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்குச் சென்று இலங்கையில் யுத்தக் குற்றம் இடம்பெறவில்லை எனக் கூறியவர் இதே ரவூப் ஹக்கீம்.

உண்மை. அன்று பேரினவாத ஆட்சியாளர்கள், நம் தமிழ் மக்களைக் கொன்று குவித்த போது மௌனமாக இருந்த ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட முஸ்லிம் அரசியல் தலைவர்கள் நம் தமிழினத்திற்குச் செய்த துரோகத்தனத்தை தமிழினம் ஒருபோதும் மறந்துவிட மாட்டாது என்பதை இவ்விடத்தில் நினைவுபடுத்தும் அதேவேளை, அரபிக் குதிரையாயினும் பிறவிக் குணம் மாறாது என்ற தமிழ்ப் பழமொழியையும் ரவூப் ஹக்கீமுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

# ஆகஸ்டில் உயர்தரப் பரீட்சை; மாணவர்களைப் பாதிக்கும்

## திலித் ஜயவீர எம்.பி கவலை

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையை ஆகஸ்ட் மாதத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் மாணவர்களைப் பெரிதும் பாதிக்கும் என சர்வஜன பலய அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர, சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நடவடிக்கை மாணவர்களின் பரீட்சைக்குத் தயாராகும் நேரத்தை கணிசமாகக் குறைக்கும் எனத் தெரிவித்த அவர்,

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பாடத்திட்டத்தை நிறைவு செய்து பரீட்சைக்குத் தயாராவதற்கு வழமையாக சுமார் 26 மாதகால அவகாசம் வழங்கப்படும்.

இருப்பினும், அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தினால் மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சுமார் ஆறு மாத காலம் பறிபோகும்.

தற்போதைய மாணவர்கள் டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட பாதிப்புகளால் ஏற்கெனவே கல்வியில் பெரும் இடையூறுகளை எதிர்கொண்டுள்ளனர். அது அவர்களின் கற்றல் செயற்பாடுகளைப் பாதித்துள்ளது.

அரசாங்கம் தனது முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரிய அவர், இந்தப் பரீட்சை அட்டவணையைத் திரும்பப் பெற்று மாணவர்களின் நலனைக் கருத்தில் கொள்ளுமாறு அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளார். உயர்தரப் பரீட்சை என்பது மாணவர்களின் கல்வி மற்றும் தொழில் வாழ்க்கையில் ஒரு முக்கியமான கட்டமாகும் என்பதையும் அவர் வலியுறுத்திக்கூறியுள்ளார். (க-7)

# மின்சாதனக் கடையில் பாரிய தீ விபத்து

யாழ். நெல்லியடிப் பகுதியில் அமைந்துள்ள மின்சார சாதனங்கள் விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை (12) இரவு 7.00 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் அக்கடை முற்றாக சேதமடைந்துள்ளது.

மின் கசிவு காரணமாகவே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட தகவல்கள் தெரிவிக்கின்ற நிலையில் இச் சம்பவம் குறித்து நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வடமராட்சிப் பிராந்தியத்திற்கு தனியான தீயணைப்பு சேவை இல்லாமையினால் இவ்வாறான அசம்பாவிதமான நேரங்களில் தீயைக் கட்டுக்குள் கொண்டு வருவது மிகச் சிரமம் எனவும் வடமராட்சிப் பகுதிக்கு தனியான தீயணைப்பு சேவையொன்றை உடனடியாக வழங்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-7,60)

# சுரேஷ் சலேயின் உடல் நிலை மோசம்

## குடும்ப உறுப்பினர்கள் கவலை

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயின் உடல் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாக அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முற்பகல் அவரைப் பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களிடம் பேசிய உறவினர்கள், அவரது உடல் நிலை தொடர்ந்து மோசமடைந்து வருவதால் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (க-7)

## நாவலப்பிட்டியில்

# மரம் சரிந்து வீழ்ந்ததில் நால்வர் படுகாயம்

(நாவலப்பிட்டி )

நாவலப்பிட்டிப் பகுதியில் நேற்று (12) அதிகாலை கனமழை மற்றும் பலத்த காற்றால், மேல் இம்புல்பிட்டிய பகுதியிலுள்ள வீடு ஒன்றின் மீது பெரிய மரம் விழுந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் வீட்டில் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.குறித்த விபத்தில் காயமடைந்தவர்களை அயலவர்கள் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

மேலும், பலத்த காற்றால் மரங்கள் முறிந்து உடைமைகளுக்குப் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# பிரதிப் பொலிஸ்மா அதிபரை கைது செய்யும் திட்டமில்லை

## நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் அறிவிப்பு

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தரவைக் கைது செய்வதற்கோ அல்லது தடுத்து வைப்பதற்கோ தற்போது எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை என சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு நேற்று அறிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்பான விசாரணைகள் தொடர்பில், நியாயமான காரணங்களின்றி தம்மைக் கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி, வருண ஜயசுந்தரவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு இவ் விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார். (க-7)

# நுவரெலியாவில் கடும் பனிமூட்டம்

## சாரதிகளுக்கு எச்சரிக்கை

நுவரெலியா மாவட்டத்தின் பல பிரதான வீதிகளில் கடுமையான பனிமூட்டத்துடனான வானிலை நிலவுவதால் வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்துமாறு அக்கரப்பத்தனை பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.


இதேவேளை நேற்று முன்தினம் இரவு கொழும்பில் இருந்து அக்கரப்பத்தனை நோக்கிப் பயணித்த கப் ரக வாகனம் ஒன்று ஹட்டன் - போடைஸ் - டயகம வீதியில் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியது. எனினும் குறித்த விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதனகழிவு முகாமைத்துவத்தில் நுண்ணங்கிகளின் பங்களிப்பு

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு









உலகளவில் மக்கள் தொகை அதிகரிப்பு, நகரமயமாதல் மற்றும் முறையற்ற கழிவு முகாமைத்துவம் போன்ற பல்வேறு காரணங்களால் சேதனக் கழிவுகள் (Organic Waste) பெருமளவில் உருவாகி வருகின்றன. தரவுகளின் படி ஆசியாவில் வருடாந்தம் 4.4 பில்லியன் டொன் அளவிலான திண்ம கழிவுகள் உருவாக்கப்படுகின்றன.

இதில் கிட்டத்தட்ட 790 மில்லியன் டொன் அளவிலான கழிவுகள் நகராட்சி திண்ம சேதன கழிவுகளாகும். இன்றைய தொழில்நுட்ப பொருளாதார காலகட்டத்தில் சேதன கழிவு முகாமைத்துவம் முக்கியமானதொன்றாக மாறிவருகின்றது.

குறிப்பாக தாவரங்கள் மற்றும் விலங்கு மூலங்களிலிருந்து உருவாகி இயற்கை முறையில் சிதைவடையக் கூடிய கழிவுகள் சேதனக் கழிவுகளாக கருதப்படும். இலங்கையில் குறிப்பாக வடமாகாணத்தில் விவசாயக் கழிவுகள், சமையலறை கழிவுகள், சிறியளவிலான தொழிற்சாலைக் கழிவுகள் மற்றும் தாவரக் கழிவுகள் பொதுவாக காணப்படும் சேதனக் கழிவுகள் ஆகும்.

சேதனக்கழிவுகள், செலுலோஸ், ஹெமிசெலுலோஸ், பெக்டின், லிக்னின் போன்ற கூறுகளை கொண்டிருக்கும். அதிலும் குறிப்பாக தாவரம்சார் கழிவுகள் பெருமளவில் செலுலோஸ் கூறுகளை கொண்டிருக்கும்.

சேதனக் கழிவுகள் சிதையக் கூடியதாக இருப்பினும் இதனை துரிதப்படுத்தும் செயற்பாட்டில் நுண்ணங்கிகள் பங்களிப்பு வழங்குகின்றன. நுண்ணங்கிகள் நொதியங்களை சுரப்பதன் மூலம் சிக்கலான சேதன மூலக்கூறுகளை எளிய மூலக்கூறுகளாக மாற்றுகின்றன. இதன் மூலம் சேதனக் கழிவுகளைச் செயல்திறன் வாய்ந்த முறையில் சிதைத்து பாதுகாப்பான பொருட்களாக மாற்றுவதில் நுண்ணுயிர்கள் முக்கிய பங்காற்றுகின்றன.

பொதுவாக பெருமளவிலான நுண்ணுயிர்கள் நொதியங்களை சுரந்து சேதன கழிவு சிதைவுக்கு வழிவகுக்கின்றன. இதில் குறிப்பாக பூஞ்சைகள், பக்றீறியா மற்றும் ஆக்டினோமைசீட்டுகள் இச்செயற்பாட்டில் வினைத்திறன்மிக்கதாக காணப்படுகின்றன.

சேதனக் கழிவு மேலாண்மையின் போது நுண்ணுயிர்கள் உயிரியல் முகவர்களாக செயற்பட்டு கழிவுகளை உரம், உயிர்வாயு மற்றும் உயர் உரம் போன்ற பயனுள்ள, இறுதிப் பொருட்களாக மாற்றுகின்றன. இதன் மூலம் கழிவுகளின் அளவு குறைவதுடன் சுற்றுச்சூழல் மாசுபடுதலை குறைக்கிறது. சேதனக்கழிவு மேலாண்மையில் நுண்ணுயிர்கள் அதிகம் பயன்படுத்தும் முறையாக கம்போஸ்டிங் (Composting) விளங்குகிறது.

கம்போஸ்டிங் என்பது ஒக்சிஜன் உள்ள சூழலில் நடைபெறும் கட்டுப்படுத்தப்பட்ட உயிரியல் செயல்முறையாகும். இதில் நுண்ணங்கிகள் சேதனப் பொருட்களை சிதைத்து ஹியூமஸ் (Humus) போன்ற நிலையான உரமாக மாற்றுகின்றன. ஆரம்ப நிலையில் மீசோபீலிக் (Mesophilic) நுண்ணுயிர்கள் இச்செயற்பாட்டை ஆரம்பிக்கின்றன.

இவை எளிதில் சிதையக் கூடிய குளுக்கோஸ் மற்றும் புரதங்களை உடைக்கின்றன. பின்னர் வெப்பநிலை அதிகரிக்கும் போது தெர்மோபிலிக் (Thermophilic) நுண்ணுயிரிகள் செயற்பட்டு, செலுலோஸ் மற்றும் லிக்னின் போன்ற சிக்கலான சேர்மானங்களை சிதைக்கின்றன.

இவ்வாறு உருவாகும் கம்போஸ்ட்சத்துக்கள் நிறைந்ததாக காணப்படும். இதன்மூலம் மண்வளத்தையும் கட்டமைப்பையும் மேம்படுத்தும் சிறந்த சேதன உரமாக பயன்படுகிறது. கம்போஸ்டிக் செயற்பாடு பல்வேறு சூழற் காரணிகளில் தங்கியுள்ளது காரணம் இச்செயற்பாடு பெருமளவில் நுண்ணுயிர்களை சார்ந்ததாக இருப்பதால் அதன் வளர்ச்சிக்கு தேவையான சூழற்காரணிகள் குறிப்பாக பொருத்தமான ஈரலிப்பு தன்மை, வெப்பநிலை, pH மற்றும் ஒக்சிஜன் அளவில் தங்கியுள்ளது.

ஒக்சிஜன் இல்லா செரிமானம் (Anaerobic Digestion) என்ற செயல்முறையில் நுண்ணுயிரிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த முறையில் ஒக்சிஜன் ,இல்லாத சூழலில் சேதனக் கழிவுகள் உயிர்வாயுவாக மாற்றப்படுகின்றன. இச்செயல் முறையிலும் பல்வேறு நுண்ணுயிரிகள் கட்டங்களாக இணைந்து செயற்படுகின்றன.

இவ்வாறு உருவாகும் உயிர்வாயு புதுப்பிக்கதக்க ஆற்றல் வளமாக இருந்து சமையல், மின்சாரம் மற்றும் வெப்ப உற்பத்திக்கு பயன்படுகின்றது. வெர்மிகம்போஸ்டிங் (vermicomposting) முறையிலும் நுண்ணுயிரிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இம்முறையில் மண்புழுக்கள் நேரடியாக காணப்படும் முகவர்களாக இருந்தாலும் அவற்றின் குடலில் உள்ள நுண்ணுயிரிகளே பெரும்பாலான உயிர் இரசாயன சிதைவு செயல்களை நடத்துகின்றன.

இங்கு பக்றீறியா மற்றும் பூஞ்சைகள் சேதனப் பொருட்களை உடைப்பதில் பெருமளவில் உதவுகின்றன. மண்புழுக்கள் கழிவுகளை சிறுதுண்டுகளாக்கி, மேற்பரப்பை அதிகரித்து காற்றோட்டத்தை மேம்படுத்துவதன் மூலம் நுண்ணுயிரிகளின் செயற்பாட்டை அதிகரிக்கின்றன.

இவ்வாறு தயாராகும் வெர்மிகம்போஸ்ட் (Vermico mpost) அதிக சத்துக்கள், தாவர வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் பயனுள்ள நுண்ணுயிரிகளை கொண்டதாக இருந்து நிலைத்த விவசாயத்திற்கு பெரிதும் உதவுகின்றது.

மேலும் உயிரியல் சீரமைப்பு (Bioremediation) செயல் முறையிலும் நுண்ணுயிர்கள் சேதனக் கழிவு மேலாண்மையில் பங்கு வகிக்கின்றன.

சில நுண்ணியிரிகள், பூச்சிக் கொல்லிகள், ஹைட்ரோகாபன் சேர்வைகள் மற்றும் தொழிற்சாலை மாசுப் பொருட்கள் போன்ற நச்சு சேதன சேர்மானங்களை சிதைக்கக் கூடிய அத்துடன் சேதனப் பொருட்கள் அதிகம் கொண்ட கழிவு நீரை சுத்தகரிப்பதிலும் நுண்ணுயிரிகள் முக்கியபங்கு வகிக்கின்றன.

சேதனக்கழிவு மேலாண்மையில் நுண்ணுயிரிகளின் பங்களிப்பு பல சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார நன்மைகளை வழங்குகிறது. இவை கழிவுகள் சேர்வதை கட்டுப்படுத்தி, பச்சை வீட்டு வாயுக்கள் வெளியேற்றத்தை குறைக்கின்றன.

உயிர்வாயு மூலம் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை வழங்குவதுடன் சேதன உரங்கள் மூலம் நிலைத்த வேளாண்மையை ஊக்கு விக்கின்றன. மேலும் இரசாயன முறைகளுடன் ஒப்பிடுகையில், நுண்ணுயிர் அடிப்படையிலான கழிவு மேலாண்மை முறைகள் குறைந்த செலவிலும் குறைந்த வினைத்திறனுடன் செயற்படுகின்றன.

முடிவாக சேதனக்கழிவு முகாமைத்துவத்தில் நுண்ணங்கிகள் அளப்பரிய சேவையாற்றுகின்றன. கம்போஸ்டிங், ஒக்சிஜன் இல்லா செரிமாணம், வெர்மிகம்போஸ்டிங், உயிரியல் சீரமைப்பு மற்றும் கழிவு நீர் சிகிச்சை போன்ற செயல் முறைகள் மூலம் நுண்ணுயிரிகள் சேதனக் கழிவுகளை மதிப்புள்ள வளங்களாக மாற்றுகின்றன.

அதிகரித்து வரும் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ள நுண்ணுயிரி அடிப்படையிலான தொழில்நுட்பங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் சுத்தமான சூழலும் ஆரோக்கியமான எதிர்காலமும் உருவாக்கப்படும்.

**கி.கேசியா,**
**பரிசோதனை செய்முறையாளர்**
**விஞ்ஞான பீடம்,**
**யாழ் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## எஸ்.எம் சந்திர...

விவசாயிகளுக்குச் சலுகை விலையில் வழங்குவதற்காக அரசாங்கத்தின் செலவில் இறக்குமதி செய்யப்பட்ட 36 ஆயிரம் கிலோகிராம் சோள விதைகளை மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து, தனது அரசியல் ஆதரவாளர்களுக்கு விநியோகித்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்செயற்பாடு இலஞ்ச மற்றும் ஊழல் சட்டத்தின் 70 ஆம் பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது. (க-7)

## கவிழ்ந்தது...

கடற்சீற்றம் காரணமாக படகில் இருந்து தவறி கடலுக்குள் விழுந்து காணாமல் போயுள்ளார். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நெடுந்தீவில் இருந்து நேற்று வியாழக்கிழமை இரவு கடற்தொழிலுக்காக இரண்டு இளைஞர்கள் படகொன்றில் கடலுக்குச் சென்றுள்ளனர்.

தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை கடல்சீற்றம் காரணமாக படகில் இருந்து ஒருவர் தவறி கடலுக்குள் விழுந்து காணாமல் போயிருந்தார். அதனை அடுத்து மற்றையவர் ஏனைய மீனவர்களுக்குத் தகவல் கூறியதையடுத்து அவர்கள் தமது படகுகளில் அப்பகுதிக்கு விரைந்து தேடுதல் நடாத்திய போதிலும் காணாமல்போன மீனவரை மீட்க முடியவில்லை.

இந்நிலையில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை முதல் காணாமல் போன மீனவரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-7,33)

## சபாநாயகரிடம்...

னர்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று பாராளுமன்றத்தில் வைத்து இக்கடிதம் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்னவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு சபையின் தலைவர் என்ற ரீதியில், இக்கருத்துகள் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்குமாறு கோரியே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இக்கடிதத்தை சபாநாயகரிடம் கையளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-7)

## பல்லேகம...

சென்று தனது இரத்த மாதிரியை வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நித்தம்புவ பொலிஸார் சமர்ப்பித்த கூடுதல் அறிக்கையை பரிசீலித்த பின்னரே மன்றினால் குறித்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில், சம்பவம் தொடர்பான ஆவணங்கள் கடந்த மே 4ஆம் திகதி அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன.

வழக்கு தொடர்பாக, பாதிக்கப்பட்ட சிறுமியுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஆடைகள் மற்றும் பிற பொருட்களில் மேற்கொள்ளப்பட்ட அறிவியல் பரிசோதனைகளில் டி.என்.ஏ தொடர்பான முக்கிய அம்சங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்த டி.என்.ஏ முடிவுகளை, சந்தேக நபரின் இரத்த மாதிரியுடன் ஒப்பிட்டு உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனைப் பரிசீலித்த நீதிபதி, டி.என்.ஏ பரிசோதனைக்குத் தேவையான இரத்த மாதிரியை பெறும் உத்தரவை வழங்கியதுடன் பரிசோதனை முடிவுகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அரசாங்கப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பாக, சந்தேக நபரான தேரர் முன்னதாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் கடுமையான பிணை நிபந்தனைகளின் கீழ் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-7)

## கடற்படை....

லாக்கள், விசேட வரப்பிரசாதங்கள் குறித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ஷ, கடந்த 2006ம் ஆண்டு கடற்படையின் விதிமுறைகளை தளர்த்தி இரண்டாம் லெப்டினன்ட் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்.

அத்துடன் கடற்படையில் போதிய அனுபவமோ, எந்தவொரு விசேட திறமையோ வெளிக்காட்டாத நிலையில் குறுகிய காலத்துக்குள்ளாகவே அவர் பிரித்தானிய றோயல் கடற்படையின் விசேட பயிற்சிநெறியொன்றுக்கு அனுப்பப்பட்டிருந்தார்.

அத்துடன் கடற்படையில் பணியாற்றிய காலங்களில் அவருக்கு பல்வேறு வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டிருந்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் குறித்த விடயங்கள் குறித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

அதனடிப்படையில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பான வாக்குமூலம் ஒன்றை வழங்க நேரில் வருகை தருமாறு யோஷித ராஜபக்ஷவுக்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அழைப்பாணை அனுப்பியுள்ளது. (க-7)

## என்புக்...

தாண்டியுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வின் 23 ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின் குமார் முன்னிலையில் இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வுப்பணிகள் குறித்து சட்டத்தரணி ரஜிதா ஊடகங்களுக்குக் கருத்துரைத்ததாவது,

நேற்றைய அகழ்வின் போது 12 மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட என்புக் கூடுகளில் 07 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

அதனடிப்படையில் இதுவரை 353 என்புக் கூடுகள் அடையாளம் காணப் பட்டுள்ள நிலையில், அவற்றில் 334 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அகழ்வுப் பணிகள் இன்று இடம்பெறாது நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அகழ்வுப் பணிகள் மீள ஆரம்பமாகும் என்றார். (க-7,33)

## பூஜிதவுக்கு...

போதிலும் அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காததன் ஊடாக கடமைகள் தவறவிடப்பட்டு குற்றம் இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற மூவரடங்கிய நீதிபதிகள் குழாத்தின் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது குறித்த வழக்கின் வாய்மூல மற்றும் எழுத்துமூல விவாதங்கள் இரு தரப்பிலிருந்தும் முன்வைக்கப்பட்டு நிறைவடைந்துள்ளதைத் தொடர்ந்து தீர்ப்புக்காக வழக்கை ஜூலை 31ம் திகதி வரை ஒத்திவைத்த மன்று குறித்த தினத்தில் இவ்வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது. (க-7)


மஹஜன சம்பத
திகதி 2026.06.12
சீட்டிழுப்பு இலக்கம் 6216
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 4 8 1 9 7 0
அத சம்பத F 1 9 7 0
சீட்டிழுப்பு இலக்கம் 0791

சுப தவசக்
திகதி 2026.06.12
சீட்டிழுப்பு இலக்கம் 8332
வெற்றி இலக்கங்கள் சிம்மம் 18 25 35 3174

தன நிதானய
திகதி - 2026.06.12
சீட்டிழுப்பு இலக்கம் - 2246
U 18 36 76 78 U

மெகா பவர்
திகதி 12/06/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2564
U 19 11 18 36 73

ஜய
திகதி 2026.06.12
சீட்டிழுப்பு இலக்கம் 0484
J 6 7 2 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4458
சீட்டிழுப்பு திகதி 12.06.2026
I 55 59 73 79

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.06.12
சீட்டிழுப்பு இலக்கம் 1525
இடபம் 09 21 36 37 இடபம்

சுப்பிரி தன சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
12.06.2026 வெற்றி வாரம் 0924
ஆங்கில எழுத்து P 4 1 4 4 5 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,256,264.80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3190 25000 பணப் பரிசு 91047
சீட்டிழுப்பு திகதி 2026.06.12 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 49 58 72 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.133,864,498.40

சனிதா
திகதி 12.06.2026 வெற்றி வாரம் 5351
38 75 76 80 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,811,638.80
ரூ. 50,000/- பணப்பரிசு 99088

சசிரி
வெற்றி வாரம் 1020
சீட்டிழுப்பு திகதி 12.06.2026 வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 20 34 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,927,200.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4902
சீட்டிழுப்பு திகதி 12.06.2026 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 08 25 35 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,341,224.80

லக்ன
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 06 13 50 57 60
2366
12.06.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.291,182,483.60

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 3016
சீட்டிழுப்பு திகதி 2026.06.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,379,063.20
20 42 45 73 L


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## கடும் கொந்தளிப்...

திணைக்களம் விடுத்த பலத்த காற்று மற்றும் கொந்தளிப்பான கடல் நிலை குறித்த சிவப்பு எச்சரிக்கையை நீடித்துள்ளது.

இது குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்,

இக்கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும். கடற்படை மற்றும் மீனவர்கள் மறு அறிவித்தல் வரும் வரை இந்த கடற்பரப்புகளுக்குள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளும் கற்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் பலத்த காற்றினால் கொந்தளிப்பாகக் காணப்படும்.

மன்னாரிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் கடல் அலைகளின் உயரம் சுமார் 2.0 முதல் 2.5 மீற்றர் வரை உயரக்கூடிய சாத்தியம் உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-7)


### பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்

2. வதந்திகளும் அரசியல் நிகழ்ச்சிநிரல்களும் உங்களை பயன்படுத்த விடாதீர்கள். வெறுப்புப் பேச்சு பெரும்பாலும் வதந்திகள், தவறான தகவல்கள் மற்றும் சமூகங்களைப் பிரிக்க முயலும் அரசியல் நோக்கங்களால் இயக்கப்படுகிறது.

ஏதேனும் தகவலை பகிர்வதற்கு முன் உங்களையே கேளுங்கள்:
இதை யார் உருவாக்கினர்? ஏன் உருவாக்கினர்?
இதனால் யாருக்கு பயன்?

பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள்.
அமைதியைத் தெரிவு செய்யுங்கள்.

இந்தத் தகவல் SOND அமைப்பினால் ஐ.நா இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வழங்கப்படுகிறது.
(7775)

### திலீபன் சதுரங்கக் கிண்ணம் - 2026!

சதுரங்கப் பலகையில் சரித்திரம் படைக்கப் போவது யார்?

காலம் : 28.06.2026, ஞாயிறு
இடம் : சிவகாமி மஹால் திருமண மண்டபம்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச்சந்தி, யாழ்ப்பாணம்
கட்டணம் : ரூபா 600

எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

போட்டி தொடர்பான முழுமையான விபரங்களினை 0772999699 என்ற வற்சப் இலக்கத்திற்கு "Chess" என்ற குறுஞ்செய்தி அனுப்பி பெற்றிடுங்கள்
(C-5826)

### Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | -213/= | Mx 3Kg |
| 1Kg கோதுமை மா | -155/= | Mx 10Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | -239/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | -239/= | |
| 1Kg அரிசி மா | -237/= | |
| 1Kg குத்தரிசி | -250/= | |
| 1Kg உடையல் பச்சையரிசி | -210/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | -170/= | |
| 1Kg தீட்டல்ப்பச்சை | -205/= | |
| 1Kg வெள்ளைநாடு | -230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | -205/= | |
| 1Kg சம்பா அரிசி | -240/= | |
| 1Kg பால்பொன்னி | -255/= | MX 3kg |
| 10Kg விஜிதா நாடு அரிசி | -2550/= | ~~3000/=~~ |
| 1Kg கடலை | -339/= | |
| 1Kg பொன்னி | -240/= | |
| 01 அங்கர் யோக்கட் | -49/= | ~~80/=~~ |

ரூ. 5000 ற்கு மேல் கொள்வனவு செய்து பரிசுகளை இலவசமாக பெற்றிடுங்கள்

400g Anchor ~~1200~~ 1145/-

1Kg சன்லைட் பவுடர் Sunlight 2in1 ~~340~~ 310/-

காசு மூலமான கொள்வனவுகளுக்கு விசேட விலைக்கழிவுகள் உண்டு.
வடமராட்சி, தென்மராட்சி டெலிவரி விநியோகங்களும் உண்டு.
டெலிவரி : 076 800 6500
(2415)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

### வீட்டுப் பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் நின்று பணி புரிவதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (உணவு, தங்குமிட வசதி இலவசம்)

தொடர்புகளுக்கு (7842)
077 032 9088

### பராமரிப்பாளர்கள் தேவை

முல்லைத்தீவில் இயங்கும் பாரதி அன்பு சிறுவர் இல்லங்களுக்கு பராமரிப்பாளர்கள் தேவை. வயது 25 தொடக்கம் 55 வரை.
(2411)

தொடர்புகளுக்கு
071 535 4501, 071 535 4502, 071 535 4500, 077 201 5234

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் மூத்தவிநாயகர் வீதியில் ஒரு வரவேற்பறை, 3 குளியலறை, 5 தனி அறைகள், சமையலறை என்பவற்றுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. (7837)
Whatsapp மெசேஜில் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

075 691 3616
077 864 4578
070 683 9442

### Win Repair

குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், ACகளும் பழுதடைந்து விட்டதா? உங்கள் இடத்திற்கு வந்து திருத்தி தருகிறோம். வீட்டு வயறிங், பிளமிங், பெயின்ரிங் வேலைகளும் செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு (7841)
076 834 6136




### மணமகள் தேவை

யாழ்.இந்து, 1991 இல் பிறந்த பொறியியலாளராக பணி புரியும் மணமகனுக்கு சைவ போசன (Vegetarian) பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கின்றனர். கேட்டை 2ம் பாதம், 11ம் இடத்தில் சூரியன், செவ்வாய், வியாழன், சுக்கிரன், கி.பா 14½
(7796)

தொடர்புகளுக்கு : 071 424 6307, 077 668 7272

### Consulate General of India, Jaffna
### Advt. No. JAF/ADM/578/01/2026
### வேலைவாய்ப்பு அறிவித்தல்

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் (Consulate General of India, Jaffna) **"சாரதி / வாகன ஓட்டுநர் (Chauffeur/Driver)"** பதவிக்கான **ஒரு (01) வெற்றிடத்தை** நிரப்புவதற்குத் தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறது.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

- இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
- **வயது 35 ஆண்டுகளுக்கு உட்பட்டவராக** இருக்க வேண்டும்.
- குறைந்தபட்சம் **கல்விப் பொதுத் தராதர சாதாரண தர** (G.C.E. O/L) தகுதியைக் கொண்டிருக்க வேண்டும்.
- செல்லுபடியாகும் **கனரக வாகன ஓட்டுநர் உரிமம்** பெற்றிருக்க வேண்டும்.
- குறைந்தது **03 ஆண்டுகள் தொடர்புடைய பணியனுபவம்** கொண்டிருக்க வேண்டும்.

இவ்வெற்றிடம் தொடர்பான மேலதிக விபரங்களும் விண்ணப்பப் படிவமும் இந்தியத் துணைத் தூதரகத்தின் இணையத்தளமான https://www.cgijaffna.gov.in இல் கிடைக்கப்பெறும்.
ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து முழுமையாக பூர்த்தி செய்து , 26 ஜூன் 2026 ஆம் திகதிக்குள் அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கீழ்க்கண்ட முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தலைமைச் செயலாளர் (Head of Chancery)**
**இந்தியத் துணைத் தூதரகம்**
**14, மருதடி ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.**
(C-5820)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org